OFFICE OF THE REGISTRAR ... 9 MAY 1907 MADRAS

ஆரியன்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

புத்தகம் 1. | 1906-வு நவம்பர்மீ | இலக்கம் 4.

விநாயகமூர்த்தி.

விநாயகமூர்த்தியானவர் முக்கியமான உபாஸன மூர்த்தியிலொருவர் இவர் பூஜை பரமசிவனது விவாகத்திலும் நடக்குமாயின், இவரது மகிமையைக்கூறவும் வேண்டுமோ? விநாயகதாராதி சரித்திரங்களைப் புராணங்களிற் பலவிதமாக கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இப்போது நாம் அவரைப்பற்றிய ரகஸியார்த்தங்களைமாத்திரங் கூறுவோம்.

மஹாரிஷிகள் விநாயகரை, ஓங்காரமென்கிற, பிரணவஸ்வரூபமாக பாவித்தார்கள்; நமது மந்திரங்களனைத்திற்கும், காரணமாயும் வேதத்தின் ஸாரமாயும், ஈச்வரனுக்கு இருப்பிடமாயும், பிரம்மவிஷ்ணு ருத்திரனென்னும் திருமூர்த்திகளின், ஸ்வரூபமாயும், விளங்குகிற ஓங்காரத்திற்கு, பிரதீகமாக கணபதியை உபாசிக்கிறோம். எங்ஙனமெனில் (ஓம்) என்னும் அக்ஷரமானது இந்தியர்களின் பாஷைகளில் அநேகமான ஒரே வடிவமாயிருக்கிறது. நாகரத்திலும் ஏறக்குறைய கிரந்த எழுத்திற்கு சமமாகவே யிருக்கிறது. இவ்வெழுத்து யானைமுகத்திற்குச் சமமாகக் கூறலாம். இன்னும் யானையினுடைய வைகரி வாக்கானது, ஓங்காரசுவரத்தை யொட்டியே இருக்கிறது: யானை, கனைக்குமாயின், நாதத்தொனிபோல் இருக்குமென்று யோகிகள் கூறுகின்றார்கள். பிரம்மாந்திரத்தில் பிராணாயாமத்தால் நாதானுஸந்தானம் செய்தவர்கள் கொர்ஜனையே உபமானமாகக்கூறுவது வழக்கம். ஆனதினால் கஜத்தின் முகத்தை கணேசன் அடைந்ததற்கு தாத்பரியம் யாதெனில், தான் பிரணவரூபமான முகத்தோடு கூடிக்கொண்டிருக்கிறேன், என்று பக்தர்கட்கு பிரகடனம் பண்ணுகிறார். முகத்தில் ஒற்றைக் கொம்பில்லாதது பிரணவத்தின் சுழிபோலிருக்கிறது.

வயிறு.

அவருக்கு பெரியவயிறும் இருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனின், இவ்வுலகமனைத்தும், தன்னிடத்திலடங்கியிருக்கின்றனவென்பதைக் காட்டுகிறது. அங்ஙனஞ்சுருதியும் கூறுகிறது.

ஸம்யுக்தமேதத்க்ஷரமக்ஷரஞ்சவ்யக்தா
வ்யக்தம்பரதேவிச்வம்பிச :

வியக்தமாயும் (வெளிப்படை) அவ்யக்தமாயும் (அடங்குதல்) க்ஷராக்ஷரங்களாயுமிருக்கிற, (க்ஷரம் நாசமுடையது அக்ஷரம் நாசமற்றது) பிரபஞ்சத்தை ஈசன் தரிக்கிறார், என்றதால் எல்லாவற்றையும் தனது பெரிய வயிற்றில், வைத்துக்கொண்டிருக்கிறார். இச்சராசராதி பிரபஞ்சங்களனைத்தும் அவருடைய வயிற்றிலோர் மூலையிலே இருக்கின்றனவென்பதைக்காட்டுகின்றது.

(சக்கரம்.)

அவருடைய கையிலிருக்கும் சக்கரம் இவரனாதியென்பதைக் காட்டுகிறது எப்படியெனில் ஓர் சக்கரத்தை கையில் வைத்துக்கொண்டு இதற்கு எந்த இடம் ஆதி (அதாவது இச்சக்கரம் எங்கு ஆரம்பித்து எங்கு முடிந்தது என்று ஒருவரைக் கேட்டால் அவர் சொல்வதற்கு யோஜிப்பார் ஜாமதி என்னும் சாஸ்திரத்திலும் (A Circle is a plane figer contain by one line) சக்கிரமென்பது ஒரே கோட்டால் வளையப்பட்ட ஒரு ரூபமென்றிருப்பதாலும் அதைப்பார்ப்பின் அந்தக்கோடு எங்காரம்பிக்கிறது எங்குமுடிந்ததென அறிவது சாத்தியமில்லை. யானதாலும் கணபதியானவர் தனதுகையில் வைத்திருக்கும் சக்கரத்தால் நான் எப்பொழுதும் ஏகமாயுள்ளவன். எனக்கு உற்பத்தி நாசமில்லை. எனது மகிமையை ஒருவராலும் அறிய முடியாது நான் அநாதி நான் அனந்தன் நானே எல்லாவற்றையும் சக்கிரம் போல் சூழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டுகிறார்.

சூலம்.

அவர் கையிலிருக்கும் சூலம் எதைக்காட்டுகிறதெனில் சூலமென்பது நுனியில் மூன்றாகப்பிரிந்தும் அடியில் ஒன்றாகவுமிருக்கிறது. அச்சூலத்தால் நாம் அறியக்கூடியது யாதெனில் கணபதியானவர் நான் ஒருவனே எப்பொழுதும் உள்ளவர் என்னிடத்திலேயே சத்வரஜஸ்தமோகுணமென்ற மூன்று குணத்தோடுகூடிய பிரகிருதியுண்டாயிற்றென்றும், என்னிடத்திலிருந்தே பிர்மம விஷ்ணு ருத்திரர்களான திருமூர்த்திகளுண்டானார்களென்றும் நானொருவனே ஸ்தூல சூக்ஷ்மகாரணபிரபஞ்சங்களில் வியாபித்திருக்கிறேனென்றும் நானே ஸ்தூலசூக்ஷ்ம காரண சரீரங்களில் விசுவ தைஜஸ்பிராக்ஞனாய் விளங்குகிறேனென்றும் நானே ஜாக்கிரஸ்வப்பன சுஷுப்தியவஸ்தைகட்கு ஸாக்ஷியாக விளங்குகிறேனென்றும் நானே அகார உகார மகாரதமதமான பிரணவசுவரூபமென்றும் நானே சிருஷ்டிஸ்திதி சம்ஹாரங்களைச் செய்கிறேனென்றும் காட்டுகிறாரெனத் தெரிந்துகொள்ளலாம்.

145311

சங்கம்.

சங்கத்தை தலைகீழாக திருத்தினால், ஓங்காரத்தின் வடிவமாகவே இருக்கிறது; அதை ஊதினால் ஓங்காரஸ்வரமே உண்டாகின்றது. ஆனதினால் அதுவும் இதற்குப் பிரதீகமே அதனால் என்னத்தை காட்டுகிறாரெனில் என்னை பிரணவசுவரூபமென அறிபவனே சம்சாரசமுத்திரத்தைத் தாண்டுவான். என்னை பிரம்மரந்திரத்தினடியில் பிராணாயாமத்தால் நாதானுஸந்தானம் செய்கிற யோகியே அறிய முடியும். ஓங்காரமின்றியோர் சப்தமுமில்லை என்பதைக் காட்டுகிறார்:

பாசாங்குசம்

பாசாங்குசத்தால் நாம் அறிந்துகொள்ளுவது யாதெனில் மாயையென்ற பாசத்தால் அஞ்ஞானிகளைக்கட்டி கருமபலமென்ற அங்குசத்தால் சுகதுக்காதிகளைக்கொடுத்து மனுஷ்ய மிருகாதி ஜன்மங்களை எடுக்கச் செய்வேனெனக் காட்டுகிறார். இங்ஙனமே விக்னேசுவரர் வல்லபகணபதி செங்கணபதி சக்திகணபதி முதலிய அநேககணபதிகளின் கையிலுள்ள அநேக ஆயுதங்களில் சிலவற்றிற்கு இங்கு தாத்பரியமெழுதப்பட்டது. முக்கியமாக கணபதியின் தியானம் யோகமோக்ஷப்ரதமானதால் அநேகதியானங்களேற்பட்டிருக்கின்றன.

மூஷிகம்

அவருக்கு வாகனம் மூஷிகமாம் (மூஞ்சூறு) எங்காவது யானையை மூஞ்சூறு தாங்கி நிற்குமா, இவ்வாகனம் சம்பவமாகுமா ? ஆகாதே அதற்கு யாது பொருளெனில்

அணோரணீயான் மஹதோமஹீயான்

அணுவுக்கணுவாய் மஹத்திற்கும் மஹத்தாய் விளங்குகிறார். என்பதைக்காட்டுகிறது. சிறிய பிராணிகள் முதல் பெரிய பிராணிகள் வரையில் நான் வியாபித்து ஆதாரமாயிருக்கிறேன். நான் விபு ஆகாசம்போல் வியாபகன் என்பதைக்காட்டுகிறார்.

மோதகம்

அவருக்கு மோதகத்திற் பிரியம். அதற்குக் காரணம் யாதெனின் மோதகமென்பது ஆநந்தத்தைக் காட்டுகிறது. லோகத்தில் சந்தோஷகாலத்திலே தித்திப்பான பதார்த்தங்கள் உண்ணுகிறார்கள். அப்பொழுது அதை செய்தேதீரவேண்டுமென விதியுமிருக்கிறது. ஆனதால் நான் எப்பொழுதும் ஆனந்தகரமாயிருக்கிறேன், நானே ஆனந்த சுவரூபி என்னுடைய லவலேசமான ஆனந்தத்தையே, அன்னிய ஜீவர்கள் அநுபவிக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறார்.

சைன்னியம்

அவரது சைன்னியங்கள் எறும்பு தேள் முதலிய சிறிய ஜந்துக்களும் பெரிய ஜந்துக்களும் இருக்கின்றன. அதனால் அறிவது யாதெனில் சர்வஜந்துக்களும் எனது ஆஞ்ஞையை சிரசின்றாங்கிப் பிரவிருத்திக்கிறார்கள். நானே சர்வத்திற்கும் சாஸ்தாவென்பதைத் தெரிவிக்கிறார்.

சந்து பொந்துகளிலெல்லாம் கோவில்.

எங்கு கண்டாலும் அவரையே எல்லோரும் பார்க்கவேண்டும் என்பதே அ

க்கோயிலின் காட்டுகின்றன அவர் எல்லோரும் முதலில் வணங்கவேண்டிய முக்கிய கடவுளானதால் பக்தானுக்கிரஹார்த்தம் ஆங்காங்கு அநுக்கிரஹிக்கிறார் என்பதைக் காட்டுகிறது நிற்க,

அவரது தலையோ யானைத்தலை. உடம்பு மனுஷ்ய உடம்பு. வயிறோ பெரும் வயிறு வாகனமோ மூஞ்சூறு இவைகளனைத்தையும் யோஜிக்குங்கால் இவரையே எங்கும் வியாபித்த மூர்த்தியென்பதைக் காட்டுகிறது. ஈ எறும்பு எண்பத்தி நான்குலட்சயோனிபேத ஜீவராசிகளுடைய ரூபமாகவும் இருப்பதாகவும் அறிந்துகொள்ளலாம். மற்றும் அவருடைய நாமத்தின் தாத்பரியத்தை விசாரிப்போம்.

விநாயகர்

விநாயகரென்றால் (வரத நாயக:) தனக்கு எஜமான் இல்லாதவர்; அதாவது தானே எல்லாவற்றிற்கும் காரணம் என்றேற்பட்டது.

கணபதி.

கணபதியெனில், (கணாநாம்பதி:) என்றபடி கணங்களான ஜீவரக்ஷர்களனைவருக்குமபதி எல்லா ஜீவராசிகளுக்கும் பதியாய் சம்ரக்ஷிப்பவர்.

விக்நேச்வரர்

விக்நேசுவரரெனில் (விக்நாநாம் ஈசவர:) சத்காரியங்களுக்கு நேருகிற விக்னங்களிலிருந்து இரக்ஷிப்பவர். அசத்காரியங்களுக்கு விக்னத்தை யுண்டாக்குபவர். அதாவது அசத்துக்களை சம்ஹரிப்பவர் அதனாலே நாம் எழுதும்பொழுதும் புள்ளையார் சுழிபோடுகிறோம். எக்காரியத்தைத் துடங்கினும் முதலில் விக்னேசுரனைத் துதிக்கவேண்டும். துதித்தால் சர்வவிக்னமுமொழிந்துவிடும். அன்னைமே சருதியும் (ஹே பிராணவல்லவரூபமே) உம்மை பிரம்மா தபசியற்றி வேதத்தின் ஸாரமாக இரஹத்சனானென்றே? அத்தகைய நீர் எனக்கு ஆத்மவிஷயமான மேதையைக்கொடும். ஹேதேவா நாசரஹிதமான ஆத்மசுவரூபத்தின் தாரணை எனக்கிருக்கட்டும். நான் ஆத்மாவை யறிவதற்கு சரீரத்தில் ரோகமில்லாமலிருக்கட்டும். எனது ஜிஹ்வையானது (நாக்கு) மதுவுக்கு சமமான ருசியோடிருக்கட்டும் அதாவது ருசியுள்ள வாக்கோடு கூடிக்கொண்டிருக்கவேண்டும் எனது காதுகள் தத்துவ விஷயங்களை ஏராளமாய் கேழ்க்கவேண்டும். நீர் பிரம்ம சுவரூபத்திற்கு கோசபூதமாயிருக்கிறீர். நான் உம்மைப் பார்க்கமுடியவில்லை. ஆனதினால் உமது ஞானத்தை எமக்கு அருளிச்செய்யுமெனதைத்தரீய உபநிஷத்தின் சிக்ஷாவல்லியில் அவ்வுபநிஷத்து நிர்விக்னமாய் முடியும்பொருட்டும் மேதாகாயத்தை யுத்தேசித்தும் பிரார்த்தனரூபமாக ஓங்கார ரூபமான கணபதியை பிரார்த்தித்திருக்கிறதென கணபதிவாதிகள் கூடகூறுகிறார்கள். ஆனதால்சர்வவி விக்னத்தையுமடியோடொழிப்பவர். இன்னும் அநேக நாமங்களிருக்கின்றன விரிப்பின் பெருகும். ஆனதால் விநாயகமூர்த்தியின் உபாசனையானது ஸர்வ ஜனங்களும் செய்யவேண்டிய முக்கிய உபாசனையாயிருக்கிறது. அதனாலேயே நம்மவர் எக்காரியம் துடங்கினும் விநாயகபூஜையன்றிச் செய்வதில்லை. இவ்வுண்மைகளையறியாமல் அநேகர் அம்மூர்த்தியை பரிகசிப்பார்கள் நமது பூர்வீகர்கள் எந்தவிஷயங்களைத்தொடங்கினும் விநாயகரை நமஸ்கரித்தே செய்வது வழக்க

ம். இப்பொழுதும், சைவம், வைஷ்ணவம், சாக்தேயம், காணபத்தியம் ஸௌரமென்றும் ஐந்து மதஸ்தர்களும் மதபேதமாக வாதித்தாலும் எல்லோரும் விக்னேசுர பூஜையை விடுகிறதில்லை. அவரவர்கள் தங்களது மூர்த்தியினது உபாசனை நிர்விக்னமாகமுடியவேண்டுமென்று எனது கருணாநிதியான கணபதியை நமஸ்கரித்தே நடக்கிறார்கள் இப்பொழுது விஷ்ணுகோவில்களிலும் கணபதியைக் காணலாம். ஆனதால் கணபதியானவர், மதங்களனைத்தையும் நடத்த துரியமூர்த்தியான பரப்பிரம்மமே. அவரே பிரணவஸ்வரூபி என்று சித்தம் அங்ஙனமே கணபதியுபநிஷத்தும் கூறுகிறது.

ஓம்லம் நமஸ்தே கணபதியே துவமேவ பிரத்தியக்ஷம் தத்வமஸி துவமேவ கேவலம் கர்த்தாஸி என்று அடங்கி துவம்பிரம்ம துவம் விஷ்ணு துவம் ருத்திர என்று கூறுகிறது.

அதனது பொருள் நீரேதத்வமஸி வாக்கியத்தால் பிரதிபாதிக்கப்பட்ட பிரம்ம சுவரூபமாய் இருக்கிறீர் நீரே பிரம்ம விஷ்ணு சுவரூபமாய் இருக்கிறீரென்று வெகுவாக பிரதிபாதித்திருக்கிறது. ஆனதினால் ஸர்வலோகங்களையும் அந்தர்யாமியாய் பெருங்கருணைத்தடங்கடலாய் யோகாநந்தமாய் விளங்குகிற நமது கணபதியை மூன்காலத்தும் தொழுதேத்துவோம்.

திருவமர்துவைமருவகத்தாமரைக்கெழு
மருணறவிடணவுதித்தடியார்ப்பாற்புரி
கருணைமாமதமெனக்காட்டுமொருமுகன்
சரணவாரிசமலர்தலையிற்கொள்ளுவாம்.

பக்தி

இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளில் மனுஷியனாய்ப்பிறப்பதரிமையெனெனில், பிறப்புஎன்பது அவ்வச்ஜென்மங்களிற்செய்யும் கருமங்கட்கேற்றவாறென, சாஸ்திரங்களாலு மனுபவத்தாலு மறிகிறோம், ஆனதினால், கருமத்திற்குத்தக்கவாறு ஜன்மம்வருவதால், ஒவ்வொரு ஜீவனும் மனுஷிய ஜன்மத்தையடையக்கூடிய கருமத்தைச்செய்யுமென, நம்புவதற்குச்சாத்தியமில்லை, மனுஷியனாகப்பிறந்த, நமக்கே மறுஜன்மமும், மனுஷியஜன்மமா வருமென, நம்பச்சாத்தியமில்லை, ஏனெனில் நமது கருமங்கள், மிருகத்தன்மைக்குப்போகக்கூடிய காமக்குரோதாதிகளுடன் சுபாவமான ஆகாரநித்திரை மைதுனாதிகளிலுமே செய்யப்படுகின்றன. விவேகத்தால் சாத்விகமான தெய்வகாரியத்தைச் செய்வோமென்றால், விவேகம்சிலருக்குந்தான் உதயமாகிறது. அரவம் தீண்டியவனுக்கு விஷம் தலைக்கேறி அல்பகாலமிறங்கி மறுபடியுமேறுவதுபோல், நம்மைஅஞ்ஞானமென்ற ஸர்ப்பம் தீண்டி அவிவேகமெ

ணனும் விஷம் தலைமேலேறியிருக்கிறது. சிறிது ஸாதனாங்கமென்னும் ஒளஷதத்தால், விவேகத்தெளிவுவரினும் உடனே அவிவேகவிஷமேறி விடுகிறது. அந்தோ !! அவ்விஷத்தாலன்றோ இச்சம்சாரசாகரத்தில் வீழ்ந்து தத்தளிக்கும்படி நேர்ந்தது நம்மிடத்திலனாதியானவஞ்ஞானம் குடிகொண்டிருப்பதால், நாம் அடுத்தஜன்மம் மனுஷியபிறப்பையே யடைவோமென்பது சாத்தியமில்லை, ஆனதால் வசமாக மனிதஜன்மத்தையடைந்த, நாம் இதை வீணாக்கலாமா !! நாம்மிருகஜன்மங்களை யடைந்தால், அவிவேகமே மேல்பட்டு நீடித்து நினைப்பும் மறப்புமற்று ஆகாராதி விஷயங்களிலேயே பிரவிருத்தியுற்றலைய நேரிடும். மேலான தேவஜன்மங்களையடைந்தால், அங்குள்ள தேவபோகத்தையனுபவிக்கவும், போககாலம் குறைந்துவிட்டதே, இனி நாம் பூலோகத்திற்குப்போகவேண்டுமேயென்றேக்கத்தாலும் காலம்கழிக்கப்படுகிறது மறுபடியும் கீழேவருவானாயின் பூச்சியாகவோ புழுவாகவோ மிருகமாகவோ மனுஷியனாகவோ பிறக்கநேரிடும். ஆனதினால் மனிதஜன்மமே பிறப்பிறப்பென்னும் பெரும்பிணியை மாற்றக்கொள்ளத்தக்கஜன்மமேனவேற்பட்டது. ஆனதினால் இப்பொழுது நாம் செய்யவேண்டுவது யாது ?

நம்மைச்சன்மமென்னும் சாகரத்தில் கருமத்திற்கேற்றவாறு, அழுத்துகிற பரமபதியை பஜிக்கவேண்டும். பஜிப்போமாயின் அவர் நம்மை கரையேற்றிவிடுவார். அவரையன்றி வேறுகதியில்லையெனவெல்லாவற்றையுமவரிடத்தில் ஒப்புவித்துவிட்டு பக்திசெய்யவேண்டும்.

பக்தியென்பதென்ன ?

நாரத சூத்திரம்.

தஸ்மிந் பரமப்ரேமரூபா

—:(o):—

பரமேசுவரனிடத்தில் பரமப்பிரேமைக்கு பக்தி யென்றுபெயர் அப்பிரேமையை நாம் எப்படிச்செய்வதெனில்? மனதைப்பரமாத்மாவினிடத்திலேயே ஒப்புவித்துவிடல். அதாவது, அவருடைய விக்கிரஹரூபமாகவே நிற்றல். அப்பொழுது தேகந்தெரியாது. சோகமுண்டாகாது உலகவிச்சையுண்டாகாது. காமக்குரோதங்கள் விலகிவிடும் இந்திரியங்களின்வழியே மனதுசெல்லாது திருப்தி அதிருப்தியென் றெங்குகண்டாலும் ஈசுவரனாகவேதோன்றும் அதையே பக்தியென்பர். பகவான் கீதையிலும் பலவிடங்களில் பக்தியோகத்தை கூறியிருக்கிறார் [மோக்ஷகாரண ஸாமக்கிரியாம், பக்திரேவகரீயஸீ] மோக்ஷத்

திற்குவேண்டிய சாமக்கிரியைக்குள் பக்தியேமுக்கியம். மனதை பலவிடங்களிலலையவிட்டுபக்திசெய்வதிற்பிரயோஜனமில்லை. தேவாலயத்தில் ஸ்வாமி தெரிசனத்திற்கு சென்றால்பக்தியே செய்யவேண்டும் அதை விட்டு அங்குகூத்தாடும் தாசிகளையும் காயனத்தையும் ஸங்கீதத்தையும் பக்தரின் அலங்காரத்தையும் பரஸ்திரீகளின் கண் திருஷ்டிகளையும ஆதாடிகளின் கூட்டத்தையும்பார்த்து தான்வந்தகாரியத்தை மறந்து விடுகிறார்கள் அந்தோ! என்ன அவிவேகம் இக்கலியுகத்தில் யோகஞ் செய்யமுடியாது. ஞானம் பயப்படுது கஷ்டம் "தியானஞ்செய்வது கஷ்டம் இதமார்க்கமே சுலபம் இத்தகைய சுலபமார்க்கத்தினுப்பிரவர்த்திப்பது துக்க மென்றால் அந்தோ! எப்படிக் கடைதேறுவது, கொண்டதே கோலம். கண்டதே காக்ஷியாகப்பூரித்து மூலையுடையமாதர்மேல்விழுந்து சோம்பலைத்துலைத்து மற்ற வேலைகளிலெல்லாருக்கேவுழைத்து பெண்பிள்ளைகளைப்பெற்று மிருகத்தன்மைக்கொப்பான தொழிலேயே சதமெனவெண்ணுது பரமேசுவரனைப்பழிப்போமாக –ரும்.

காமுர் நாடோறும் வாடாமலர்கொண்டு
பாமுர் வன்றுமக் வீட்டேபெறலாமே.

நசிகேதஸ்.

மனதின்சுபாவம் எங்கு எங்ஙனம் பார்க்கிறதோ அங்ஙனமே வாங்கிகொள்ளுகிறதனாலும் எதைஇச்சிக்கிறதோ எதை இந்தஜனமத்தில் எப்பொழுதும் தியானம் பண்ணுகிறதோ, அதையேஅது அடுத்த ஜன்மத்திலடைய நேரிடும். அதற்காகவே சுவர்க்கலோகத்திற் போய் இந்திராதிதேவர்களுடனிருந்து சுகத்தையனுபவிக்கவேண்டுமென்றும்அவர்களை மந்திரத்தால்பிரார்த்தித்தழைத்து அக்னியின்முகமாக ஆவிர்ப்பாகங்கொடுத்து அவர்களது அனுக்கிரகத்தைப்பெற்றுப்பிறகு, ஆயுட்காலபரியந்தம் தேவதைகளின் திருப்திக்காகவே, அக்னிஹோத்திராதி கர்மங்களை இயற்றி மரணகாலத்தில் அதையே "யம்யம்வாபிஸ்மரன்பாவம்த்யஜத்யந்தேகளேவரம்" எப்படி மனஸில் பாவித்துக்கொண்டு, சரீரத்தை விடுகிறானோ அங்ஙனமே அந்தரூபத்தையே சரீராந்தத்திலடைகிறான். என்றபடி இறந்தவுடன்.

தெதூமமபிஸம்பவந்தி, தூமாத்ராத்ரிம்
ராத்ரேரபரபக்ஷம அபரபக்ஷாத்யாந்ஷட்தக்ஷிணைதி
மாஸாம்ஸ்தாந்நைதேஸம்வத்ஸரமபிப்ராப்னுவந்தி
மாஸேப்யபித்ருலோகம்பித்ருலோகாதாகாசம்
ஆகாசாச்சந்த்ரமஸம் ஏஷஸோமோராஜாதத்தே
வாநாமந்நம்தம்தேவாபக்ஷயந்தி.

என்றபடி அவன் புகைரூபமாகிறான். பிறகு ராத்ரியை அடைகிறான் பிறகு கிருஷ்ணபக்ஷ அபிமானிதேவதையையடைகிறான். பிறகு தக்ஷிணாயன அபிமான தேவதையையடைகிறான். பிறகு ஒருமாஸத்தில் பிதிர்லோகத்தையடைகிறான். பிறகு ஆகாசத்தின வழியாக சந்திரமண்டலத்திற்குப் போகிறான். அங்கிருந்து தேவலோகத்திற்குப் போகிறான். தேவதைகள் இவனை வேலைவாங்குகிறார்கள், அங்கு இவனும் தேவபோகத்தை அனுபவிக்கிறான் இங்கு அறியவேண்டுவது யாதெனில் சுவர்க்கலோகத்திற்கு போகபிரியமுள்ளவனும் அதற்கு வேண்டிய அந்தக்கரண சம்ஸ்காரமுடையவனை சந்திரமண்டலமானது முற்கூறிய வழியாக ஆகர்ஷித்துக்கொள்கிறது. இதை விசிப்பின் வளரும்.

இரசிகோதனால் கேழ்க்கப்பட்ட இரண்டு வரங்களும் தனது பிதாவின் க்ஷேமத்தின் பொருட்டு ஒன்றும் மற்றொன்று லோகோபகாரமாக சுவர்க்கலோகத்திற்கிச்சையுள்ளவருக்குப் யோகப்படும்படியாகக்கேட்டனள். இதனாலவருக்கு சுவர்க்கலோகத்திற்குப்போய் அந்தகதை யனுபவிக்கவேண்டுமென்று பிரியமன்று. அவர் தந்தவநிஷ்டைக்குயோக்கியர் இவ்வுலகத்தை திருணமாக மதித்தவர். அவராது பாலியப்பருவத்திலேயே பரிகரிக்கப்பட்டவர் ஆனதால் அவருக்கு ஒருபோதும் இவ்வாழ்க்கையிலும் இந்திரிய சுகங்களிலும் பிரியமுள்ளவரன்று. பிறகு மூன்றும்வரனை கேழ்க்கிறார். இவ்வரனே அவருடைய விரக்தியை தெரிவிக்கிறது.

மனிதன் இறந்துவிட்டால், சரீர இந்திரிய மனோபுத்தி முதலியவைகட்கு விலக்ஷணமாய் அடுத்ததேகத்தையடையக்கூடிய ஜீவனுக்காதாரமான ஆத்மா ஒன்று இருக்கிறதா? சிலர் இருக்கிறது என்கிறார்கள் சிலர் இல்லை என்கிறார்கள் அப்படியிருக்காவதைப் பிரத்தியக்ஷமாகவாவது அனுமானத்தாலாவது அறிய முடியாதன்றோ? அவைகட்கெல்லாம் காரணவிஞ்ஞானமான மோக்ஷத்தை எமக்குத்தெரிவிக்க வேண்டும், நான் உமது முக்கிய சிஷியாளன்றோ என்றனர்.

அதைச்செவியுற்ற, காலன் இவர் நிச்சயமாகவே பிரம்மஞானத்தைபதிவதற்குச் சக்தியுடையவரா? அவர் இந்த ஞானத்திற்குப்பாத்திரமா? இல்லையாவென அடியில் வருமாறு பரீக்ஷிக்கிறார் குழந்தாய் தேவர்களும் இவ்விஷயத்தைப்பற்றி பிக்கச்சம்சயித்தனர் சாத்தியமற்றது அதைச்செவ்வையாய் அறியமுடியாது. அவ்விஷயத்தைக்காதாற்கேழ்ப்பினும் அஞ்ஞானிகளுக்கு பிரகாசமாகாது எப்படி அனு

வானது வெகுசூக்ஷமமாகுமோ அங்ஙனமே வெகு சூக்ஷமமானதா
லும் இதை சொல்லியும் அடைய முடியுமோ முடியாதோவென, சந்
தேகமான பாவத்தையுடைத்தாயிருப்பதாலும் வேறுவரனைக்கேட்டு
க்கொள்க என்றனர் பிறகு நசிகேதஸ் கூறுகிறார்.

தேவர்களும் விஷயத்தையறிவதற்குச் சக்தியற்றார்கள், என்று
நீரே கூறுகின்றீர்கள். அத்தகைய மஹாரகஸியமாயும் பண்டிதர்களா
லும் அறிவதற்குச்சாத்தியமற்றதுமான அம்மஹாவித்தையைக்கூறுவத
ற்கு தம்மையன்றி நான மூவறுயாரை யடையப்போகிறேன். நான
ங்கு தேடினாலும் அங்களைபோன்ற குருவையடைய முடியாது. இவ்
வரமே அடியோடு ஜன்மத்தை நிவர்த்தித்து மோக்ஷப்ராப்திக்கேது
வானதால் இதற்குச் சமமானவரன், வேறுஎனக்கில்லை எனறனர்
இதைக்கேட்டமிருத்யுகூறுகிறார் மூன்றுவயது வரையில்ஜீவிக்கக்கூ
டிய புத்திர பவுத்திரர்களை ஏராளமாயடையவேண்டுமென்றும் ஆட்டு
க்கைகள் மாட்டுமந்தைகள் யானை குதிரைமுதலிய பசுவர்க்கங்கள்
வேண்டுமென்றும் கேட்டுகொள்க. பூமியிற் பெருத்த ராஜ்ஜியத்தைக்
கேட்டுக்கொள்க வேண்டியதையும், பிரார்த்தித்துக்கொள்க. பூலோ
கத்தில் எவ்வளவுநாள் நீ சுகமாகவாழ்க. நீ சுதந்தரமாய் இச்சையுள்ள
வரையிலும் பூமியை அரசசெலுத்தலாம் இன்னும் இத்தகைய வேண்டிய
வரங்களை பிரார்த்திப்பினும் கொடுக்கிறேன் நீ நினைத்தபடியெல்லாமனு
பவிக்கக்கூடிய காமங்களைத்தருகிறேன் நான் சத்தியசங்கல்பமுள்ள
தவனன்றோ! எவ்வித்த காமங்கள் உனக்கு பூலோகத்தில்வேண
டுமோ அவ்வளவையும் பிராத்திக்கொள்க. இன்னும் புருஷர்கள்
ரமிக்கக்கூடியவர்களாயும், ரதங்களோடுகூடியவர்களுமான வாத்தியங்
களோடு கூடியவலஸரான அப்ஸரஸ்திரீகளைத்தருகிறேன். இத்தகைய
ஸ்திரீகள் மனுஷியலோகத்தில் கிடைப்பதரிது அவர்களை உனக்கு பரிசா
ரகஞ்செய்யச்செய்கிறேன். நசிகேதஸ் நீ கேட்ட மரணசம்பந்த பிரசி
னத்தை விட்டொழிக.

இங்ஙனம் பலவாறு மிருத்யுவான் அவர்மனதை பரீக்ஷிக்கப்
பட்டும், அவர் அவைகளைச்சிறிதுமபேக்ஷிக்கவில்லை. அதனிடத்தில்
ச்சபுத்தியுடன் கூறுகிறார். தங்களாற் கூறப்பட்டவைகள் நாளைக்கு
இருக்ககூடியவைகளா என சந்தேகிக்ககூடியன மற்றும்இந்திரியங்க
ளின் சக்தியையொழிக்கக்கூடியதும், அல்பமுமான அப்ஸரஸ்திரீக
ளின் போகங்கள், அனர்த்தத்தையே உண்டுபண்ணும். எங்ஙனெனில்,
தருமம், வீரியம், பிரஞ்ஞை தேஜஸ் முதலியவைகளை க்ஷமிக்கச்செய்

வார்கள். அவர்களது சேர்க்கைத்துக்கத்தையே கொடுக்கும். என்னை
தீர்க்ககாலஞ்ஜீவிக்கசெய்கிறேன் என்கிறீர் உமக்குங்காலம் ஓர் அளவு
டையதுதான். பிரமனும், ஓர்காலத்தில் ஒழிந்துவிடுவானெனில், நமது
காலம் எவ்வளவு அமைப்புள்ளது. அற்பமே, ஆனதனால், மூக்காலங்
களும் அப்ஸரயதிர்களும், தம்மிடத்திலேயே இருக்கட்டும். தம்மைப்
போன்ற மஹான்களை தெரிசித்தால், அவைகள் எனக்கு கிடைப்பதி
யல்பே ஆனதால் நான் மூற்கூறியவரனையே தரவேண்டும். அவ்வரனை
யன்றி வேறொன்றை யான் வேண்டேன் என்றனர். பிறகு மிருத்தியு
இவரது தைரியத்தையும், வைராக்கியத்தையும் கண்டுமகிழ்ந்து ஆத்ம
வித்தையை உபதேசித்தார். அவ்வித்தையையடைந்துபிரமஞானியாய்
இவ்வுலகம் பற்றற்ற நிறாய், ஞானிகளின் திலகமாய் மிருத்தியுவினி
டத்து உத்திரவு பெற்றுக்கொண்டு பிறகு தனது தந்தையிடத்து சென்
றார் அதைகண்ட பிதாவும்மகிழ்ந்து ஆநந்தபரவசராய் தனது ஓரே
புத்திரன் மிருத்தியுலோகத்திலிருந்து திரும்பி வந்ததுடன், பிரம்ம
ஞானியாய் இருப்பதைக்கண்டு அடங்கா ஆநந்தத்தையடைந்தார்
அக்காலத்திய மஹரிஷிகளுக்கு பணத்திலும் மற்ற ஸ்திரியாதிபோ
கங்களில் சிறிதும் இச்சையில்லை யென்பதையும் எக்காலத்தும் தத்து
ஞானத்தையே எதிர்பார்த்தவரென்றும், அவர்கள் மஹா வல்லமை
ள்ளவர்களென்றும் இதனாலறிகிறோமல்லவா மற்றும் நசிகேதஸ் எ
னும் சிறுவரது சத்தியவாக்கும், அவரது மனோதைரியமும் அ
மிருத்தியுவினிடத்திற்சென்றுகேட்ட மூன்று வரன்களுடைய மகிமை
களையும் பார்க்க, இத்தகைய பிரம்மசாரிகள் இப்பொழுது நம் தேசத்
தில் ஒருவருளரோ ? இல்லையோ பிரம்மசரியமென்ற ஆச்சிரமமே
போய்விட்டதே. ஒற்றைப்பூணூல்போடுவதே பிரம்மசரியமாகவிளங்கு
கிறது அந்தோ! மூற்காலத்தில், நசிகேதஸைப்போன்ற பிரம்மசாரிகள்
எவ்வளவு வல்லமையுடையவர்களாயிருந்தார்கள் அவர்கள் வல்லமை
யிலாயிரத்திலொருபங்குகூட இக்காலத்தவர்கட்கில்லையே. இருஷிகள்
வம்சத்திற்பிறந்த நாம் சிறிதேனும் சக்தியன்றி இழந்தோமே, தற்கா
லத்தியவர்கள் சந்தியாவந்தனமும் சரியாகசெய்வதில்லையே, கொண்ட
தேகோலம் கண்டதேகாக்ஷியாக அல்பபோகங்களான இந்திரியங்கள்
போகத்திலேயே நம்மவர் மனம் அழுந்திகிடக்கிறது இப்போகங்க
இன்றைக்கிருந்து நாளைக்கொழியுமே ஓர்நிலையுடையனவில்லையே, ஆ
தால் நமது நசிகேதஸ் திவ்விய சரணாவிந்தங்களுக்கு அநேககோ
வாதனங்களைச்செய்வோமாக.

ஓம் சுபம்

தமிழருமை.

ருக்மணிக்கும் ஸத்யபாமாவுக்கும் நடந்த ஓர் அரிய ஸம்பாஷணை.

ஸத்தியபாமை:—அக்காள்! நம் நாயகராகிய கிருஷ்ண பகவானது வதனா ...ந்தமாய் முழுமதியை இடைவிடாதுன்னிச் செழிக்குஞ் செந்தாமரை மலர் ...ாலும், விளங்குகின்ற உன் முகம் இப்போது வாடியிருப்பது எம்மதியாலோ?

உருக்மணி:—என்னருமைத் திருத்தங்கையே இவ்வுலகில் எத்தனையோ ...ாஷைகளிருக்க ஆங்கிலேயமே அதிகப்பட்டிருப்பதோடும் அதை அப்பியசிப் ...வர்களுக்கு மாத்திரம் ஆஸ்தி நாஸ்திகளும், கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்களும், மேன்மேலும் உண்டாகியும் நம்மவர்கள் அப்பாஷையை தம் குலத்திற்குரிய ...தும் உயர்ந்ததுமாகிய மஹா மந்திரமாம். காயத்திரி ஜபத்திற்கும், வேதத்திற் ...ும் மேற்பட்டதாக பாவித்துக் கொண்டாடுகின்றார்களே என கவல்கின்றேன்.

ஸத்தியபாமை:—ஆங்கிலம், பிரான்சு, கிரீக், லத்தீன் முதலிய இராஜ பாஷைகள் தாம் அதிபாஷையும், ஐசுவரியமும் அழகும் தரத்தக்கதே தவிர ஸமஸ்கிருதம் தமிழ் முதலிய ஸ்வஜாதி பாஷைகள் அவற்றைப்போல் மேன்மையை தரத்தகாததுவென நினைக்கிறேன் என்றார். ஏனெனில் "அரசன் எவ்வழி குடிகளவ்வழி" யென்ற முதுமொழிக்கிணங்கவும்,

"முன்னவ னருளைப்பெற்று மும்மையுந் துறந்தாரேனும்
மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காரன்றே."

என்பதற்கு மிணங்க அவ்விராஜ பாஷையே மேன்மையை தரத்தக்கது வென்று

"திருமைகொள் வளனொடு தீதில் கல்வியு
மிருமையி னொன்றினை எய்திடாத
னருமை கொள்ள வுயிர் அதனை யாற்றவும்
பெருமைய துடையது யேயின் றோற்றமே."

செல்வத்தையும், கல்வியையும், சம்பாதிக்காத மானிட ஜன்மத்திலும் பசு... பிறந்த துயர்வல்லவா வென்றும்,

"முனிவரு மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமென்றும்,"
"வரியா ரிருமை யறியார்" என்றும்

...க்கோவையாரி லருளச்செய்தாரல்லவா? செல்வமில்லாதவ ரெல்லா நன் ...யு முடையவராயினும்,

"இல்லானை இல்லாளும் வேண்டாள்,
மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்;
செல்லாது அவன் வாயில் சொல்"

...ன்றும் சொல்லியிருக்கவில்லையா.

"அளவரும் வித்தையே யன்றி மேன்மையு
முளப்படுத் தருமமு முயர்ந்த கீர்த்தியுங்

கொளப்படு வெற்றியும் பிறவும் கொட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன்றில்லையே"

யென்றும் அத்துணைச் சிறப்பினையுடைய பொருளைத் தருவது ஆங்கிலேய மன்றோ? செல்வத்தை தருவது ஆங்கிலேயமா யிருப்பதால் அதைப்படியாது பொருளின்மையையும் துன்பத்திற்குள்ளாக்கும்படியான தமிழ், ஸம்ஸ்கிருதம முதலிய தரித்திரபாஷையைப் படிப்பதினால் யாதொருபொருளும் கிடைக்காது க்ஷேமமுமில்லை, க்ஷாமமே குடிகொள்ளுமென்பது நிச்சயமென்றார்.

உருக்மணி:—இவற்றை யெல்லாம் கேட்டுச்சிரித்து போ! போ!! தென்மொழி வடமொழி யென்ற இரண்டு பாஷைகளுக்குள் தென்மொழியிலிருந்து கன்னடம், கேரளம் முதலிய அரியபாஷைகளும், வடமொழியிலிருந்து அங்கம், வங்கம், கலிங்கம் முதலிய பாஷைகளுங்கூடி பரதகண்டபாஷைப் பதினெட்டா யிற்று. ஆகையால் ஆதிபாஷை யிரண்டே. சிலர் ககரம் முதலிய ஐவர்க்கத்தி லும் முதலும் ஈறுமாகிய விரண்டும்கூட்டிப் பத்தெழுத்தும், ய முதலிய நான் கெழுத்தும் கூட்டி ஆகப்பதினான்கும் (ற, ன, ழ, ள) இந்நான்கும் கூட்டி பதி னெட்டு மெய்யும்; உயிரில் ரு முதலிய நான்கையும், அம் ஆகாவென்ற இரண்டு யெழுத்துக்களையும் கழித்து பத்தும் எ, ஒ வென விரண்டும் கூட்டி முதல் யெழுத்து 30-ம் சார்பெழுத்தாகிய ஆயுதமும் கூட்டி 31 யெழுத்தில் இலக்கண ஆசிரியராகிய அகத்தியமாமுனிவர் பிராமணரானபடியினால் இவ்வாறு சேர்த் தார். ஆகையால் தமிழும் வடமொழியிலிருந்து வந்தது என்ப. சிலர் அகத்திய ருக்கு கடவுள் உபதேசித்தது, தமிழ், வித்திலிருந்து மரம் வெளிப்பட்டாங்கு, ஐவர்க்கத்திலும் இடையில் மூன்றும் களைந்ததும், உயிரில் இடையில் நான்கு களைத்தும் ஈற்றிலிரண்டு துளிர்த்தும் தமிழிலிருந்து ஆரியம் வந்ததென்ப. அது எவ்வாராயினும் இவ்விரண்டும் தெய்வ பாஷையே.

ஸத்தியபாமை:—தென்மொழியை எவ்வாறு தேவபாஷையெனச் சொ லாமென?

உருக்மணி:—சொல்லலாம்; தேவனாலே சொல்லப்பட்ட பாஷை, தே பாஷை நீதியுள்ள பாஷை, தேவபூஜாருகமான பாஷையென்று பொருள்யெ

ஸத்தியபாமை:—ஆனால் தேவன் யாரோ வென?

உருக்மணி.—ஆரியர்களாலே அர்ச்சிக்கப்பட்ட சங்கர நாராயணரே.

ஸத்தியபாமை:—இத்தமிழை யாரால் வெளியிடப்பட்டதென?

உருக்மணி:—உயர்வுள்ளவருக்குபதேசித்தாரா? உயர்வில்லா தவரு குபதேசித்தாரா? உயர்வுள்ளவருக் குபதேசித்திருப்பாரேல் யாம் ஒப்புக்கொ ளத்தக்கது. அல்லரேல் ஒப்புக்கொள்ளத்தகாதென.

உருக்மணி:—சிரித்து என்னருமை தங்கையே நீ கேட்பாயாக. அது உய வுள்ளவருக்கே உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை:—உபதேசிக்கப்பட்டவர் யாரோவென?

உருக்மணி:—அகத்தியமாமுனிவருக்கு, அவர் பெருமை இன்னும் சொ லுகிறேன். உன்னுடைய யர்த்திப்பேசப்படு மித்தமிழானது ஆரியர்க்கு உரித்தான

மொழியாக ஒப்புக்கொள்ளத்தக்கதென்பாயேல் அது உயர்வுள்ளவருக்கே உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை :—அவர் யார் யென ?

உருக்மணி :—விருத்திராசுரன் இறந்து ஒளித்த கடலை உழுந்து அமிழ்ந்தும் அளவின் ஜலமாயுறிஞ்சிய (ஆசமித்த) வரும், நாரத தூண்டியால் மகமேருவுக்கு மாறாய்ச் சூரியசந்திரர் முதலிய கோள்களையும் நாள்களையும் தந்தார் நெறியில் செல்லவிடாது தடுத்தெழுந்திருமாந்திருந்த விந்திய பர்வதத்தை தேவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி கடலை யடக்கிய கையை பிரமபுரம் வரையிலுயர்த்தி மேற்படி மலையினுச்சியில் கையைவைத்து பாதாளத்திலழுந்தச்செய்தவரும் ஸ்ரீ பார்வதி தேவியார் திருக்கலியாண காலத்தில் தேவலோகத்திலுள்ள முப்பத்துமுக்கோடி தேவர்களும முனிவர்களும், மற்றுமுள்ளோரும் இமவத் பருவதத்தில் ஒருங்குசேர வடபாகம் பாதளம் கொள்ள அதையறிந்த சிவபெருமான் ஆக்ஞையால் பொதிகைமலையிலிருந்து முப்பத்திமுக்கோடி தேவர்களுக்கும் மூவர்களுக்கும் தனிவையொப்ப நிறுத்து காட்டியவருமாகிய அகஸ்தியமாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை :—ஆம், ஆம், அக்காள் நன்றாய் சொன்னாய். நீ எடுத்துக்கொண்ட சுவல்ப தமிழை யுயர்த்திப்புகழ, இவ்வளவு அகடுமுகடு பேசி மேலோர்களை எல்லாம் தாழ்த்தி உன் அகத்தியமுனிவை யேற்றிப்பேச நீ எங்கேபோய்க் கற்றுக்கொண்டாயோ. தொன்றால் கருத்துக்களை முறைக்குமென்றாய் முசலாக்கிரமாய் உன் புத்தியை ஸ்மடரில் வைத்துதான் இழுக்கவேண்டுமெனச்சொல்லி இருகைகொட்டிச்சிரித்து இதற்குவேறு ஏதாவது பிரமாணங்கள் உண்டாமென?

உருக்மணி :—என் அருமைத்தங்காய் நான் சொன்னதற்கு அனேக பிரமாணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைச்சொல்லுகிறேன், நீ சற்று கவனித்துக்கேட்பாயாக.

அதாவது :—கடலுருச்சி என்றதற்கு புராணச் சாக்ஷியான கவி,

கைத்தலைக் கறந்தவைக்கும் கடலை வெற்படக்குங் கையால்
பெற்றும் தொல்லைத்தாக்கிப் பதிகினுன் பிறைசேர் சென்னி
யையனை யருளைப்பெற்றோர் அதிசயமிதன்பின் மூன்று
...லும் செய்ய வல்லவரவரே யன்றோ.

மலையமுநந்தினதற்குச் சாக்ஷி.

சேட்டது மதனைச் சிற்றங்கிளைச்சிட ஞ்கைத்து நாதன்
தாட்டுமேன் புண்ணித் தென்றுன் தமகன் வேண்ட வாழி
மட்டுறச் செறித்த கையை மறையன் பதத்தின்காறு
நீட்டினன் றவமேயன்றி நெகிழ்பொருள் பிறவுமுண்டோ.
அற்புதமமார் கொள்ள வாற்றவும் புரியோர் விந்த
வெற்பினை தும்பர் தன்னின்பியுபர் குடங்கை சேர்த்தி
வற்புற வூன்ற வல்லேமற் றவட்புவிக் கட்டாழ்ந்து
சொற்பிலம் புகுந்து சேடன் றென்னிலை யடைந்த தன்றே.

ஒப்ப நிறுத்ததற்குச் சாக்ஷி.

பொதிய மதென்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைத்த
துகியுறு வடபாற் றென்பாற் புவனியோர் துலேபோ லொப்ப
வஹவொழு துயிர்களானே ரணக்கொளி இயரனே யேத்தி
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லே வதுவையின் செய்கை சொல்வாம்

ஸத்தியபாமை :—ஆம் அக்கான் அது தேவப்பிரீதியுள்ளதாவென :

ருக்மணி ;—ஆம், தேவப்பிரீதி யுள்ளதுதானே யென்பதற்கு புராணசாக்ஷிய மிருக்கின்றன. அதாவது :—

"மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்பான்' யென அருணகிரியாராலும்

"தமிழ்த் திருச்செவி மாந்தவு மன்றோ" யென திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதிமாமுனிவராலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸத்தியபாமை :—எஸ், எஸ் அக்கா அப்படியானல் இந்த தமிழ்பாஷையை அங்கீகரித்தவர் யாரென்று கேட்டாள்.

உருக்மணி :—இந்த ஸ்வேத விராக கல்ப்பத்தில் உலகம் ஒழிந்துப்போக, பிரம்மா, ஈசுவரனுடைய ஆக்ஞையால் மறுபடியும் ஜகத் சிருஷ்டி செய்தபோது தேவர்முதல் தாவரம்வரையில் தோற்றமாயின. அப்போதே பிரம்ம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரர்களும் பிர்ம்மாவின் முகம், புஜம், தொடை, பாதம் ஆம் அவயவங்களினின்றும் தோன்றினார்கள். இவ்வித லீலைகளை நடத்துபவரும், ஸர்வத்திற்கும் சாக்ஷி பூதமாய் ஸகலத்தையும் பார்ப்பவருமாகியபரமசிவத்தின், கையிலுள்ள உடுக்கையினின்றும் ஓர் மஹா வாக்கியம் பிறந்தது

அ	இ	உண்	க	ட	தச்
ரு	லு	க்	ச்ச	ப்யக்க	ட்டதவ்
எ	ஒ	ங்	க	ப	ய்
ஐ	ஔ	ச்	க்க	ப்பச்ஷ	ட்டந்தவ்
ஹ	யவர	ட்	ச	ஷ	ஸர்
ல		ண்	ஹ		ல்
ஜ	ப	ஞ்			

யெனக்காரங்களினதே. அதுதான் மஹேசுவர ஸ்தோத்திரமென்று பெயர். மேற்சொல்லிய சூத்திரத்தின் பாணினிமுனிவர் அச்சூத்திரத்தை முதலாகக்கொண்டு பாணினியமென்னும் ஓர் நூலைச்செய்தார். அதற்கு பதஞ்சலிமாமுனிவர் மாபாஷியஞ்செய்தார். (இதுநிற்க) அகஸ்தியமாமுனிவருக்கும் அவ்வாறே இலக்கணமுபதேசித்தார். அகஸ்தியமாமுனிவரும் அதிலினின்றும் இயல், இசை, நாடகமென மூன்றாய்ப்பிரித்து தொல்காப்பியமாமுனிவர் முதலிய பன்னிரு மாணாக்கர்களுக்குபதேசித்தார். தொல்காப்பியமாமுனிவர் இயலை வேறுபிரித்து எழுத்து சொல்; பொருள் யென மூன்றாய் வகுத்து தொல்காப்பியமென ஓரரிய நூலைச்செய்தார். அதை முதலாகக்கொண்டு இலக்கண விளக்கம் நன்னூல் முதலிய

முப்பத்திரண்டு இலக்கணங்கள் யெழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஆக ஐந்தாகப்பகுத்து பிற்காலத்தாரால் 32 சார்பு நூல் செய்யப்பட்டன. முன் சொன்ன அகத்தியத்துள் இசைநூலை வேறுபிரித்து வழிப்படுத்தார். பெருநாரை பெருங்குருகு முதலிய நூலுடையார் இசற்கு எழிசையாவன உயிர் நெட்டெழுத்து எழுமாம்.

நாடகத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார். முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய நூலையுடையார். அகத்தியமும், அதனைவழி நூலாகிய தொல்காப்பியமும், பெருநாரைப் பெருங்குருகு, முறுவல் முதலிய வழிநூல்களும், இதை யாதாரமாகக்கொண்டு செய்யப்பட்ட மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கும் முதலிய நூல்கள் முதலிடை கடைச்சங்கங்களிலும் ஆராயப்பட்டன. முதல்ச்சங்க நூலும், இடைச்சங்க நூலும் கடல் கொண்டன. கடைச்சங்க நூல் நவாபு காலத்தில் அவர்கள் மதத்திற்கு மேலான நூலாகிய குரானுக்கு மாறுதலையா யிருந்தமையால் அம்மிலேச்சர்களால் அக்கினிக்கு இரையாக்கப்பட்டன. போக மீதியிருந்ததையும் செல்லுக்கிரையாயின. அதிலும் தப்பியிருந்தவைகளை பிற்காலத்தில் தமிழபிமானியும், தமிழ்ச்சாகரம் தாண்டுவதற்கு ஓர் நாவாய்போன்றவரும், சைவநெறி வழாது நடைநொடி பாவனைகளால் உலகத்தில் நடாத்தி விளங்கினவரும் சைவமணியும் யெமது ஆசார்யருக்கு ஆசார்யரும் ஞானசூரியரும், மாணியாசார சிலச்சங்கருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாலும் மாசற்ற மாந்தர்களில் மணத்தை விளக்கிக்காட்டும் மனவுறுதியுள்ள தாமோதரம் பிள்ளை அவர்களால் இலக்கியங்களும், சிவபுராணங்களும் பலபிரதிகளை வெகு பிரயாசைப்பட்டு தேடியும் முறிந்து, நெரிந்து, நொருங்கி, செல்லிற் கிரையாயிருந்த தாள்களை கோர்வைப்படுத்தி இது இன்ன நூலெனக் கண்டுபிடித்து அச்சியற்றினார்கள். சமண நூல்களை விட்டுவிட்டதினால் இக்கும்பகோணத்தில் கெவர்ன்மெண்டு காலேஜில் தமிழ் தலைமைப்புலமை வாய்ந்து நடாத்தினவரும் தற்காலம் மதுரைச்சங்கத்திற்கு மஹா மஹோபாத்தியாயர் பட்டம் பெற்றவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ வே. சாமிநாதய்யர் அவர்கள் சிந்திச் சிதைந்துபோன அரிய பெரிய நூலாகிய பஞ்சகாவியங்களையும் பெரும்பான்மையும் அச்சியற்றினும் ஆக ஆதிபாஷை பாணினி மஹாமுனிக்கு உபதேசித்த வடமொழியும், அகஸ்தியமஹாமுனிவருக் குபதேசித்த தென்மொழியுமாகிய ஆதிபாஷை இரண்டே. இவ்வரு நான் சொன்னதற்கு பிரமாணம்.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
மண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச் சிலசில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்பட கடந்ததாய யெண்ணவும் படுமோ" என்றபடி
"தொண்டர் நாதனை தூதிடை விடுத்ததும் முதலை."
"உண்ட பாலனை அழைத்ததும் யெலும்பு பெண்ணுருவாய்
கண்டதும் மறைக் கதவினை திறந்ததும் கன்னி தண்டமிழ்ச்சொலோ மறு
புலச்சொல்லோ சாற்றீர்

என்று திருவிளையாடல் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதற்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர் சிவபெருமானாகிய இறையனார், குமரவேள், அகத்தியமாமுனிவர் முதலாகிய ஐந்நூற்று நாற்பத்தி ஒன்பதின்மர்; இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர், ஸரஸ்வதி அவதாரமாகிய நாற்பத்தி யெண்மரும், இறையனாரும் கூட்டி நாற்பத்தி ஒன்பதின்மர். இவருக்குச் சிவபெருமானாற் சதுரமாம் அளவிரண்டு சாணளவதாய் சிவபெருமானால் கொடுக்கப்பட்டதும், மெய்ப்புலவர்களுக்கு முழம் வளர்ந்து இடங்கொடுக்கும் தெய்வத்தன்மையுடையதுமாம் கலைமகள் திருமேனியாகிய ஐம்பத்தி ஒரெழுத்தில் நாற்பத்தொன்பது எழுத்தும், நாற்பத்தி ஒன்பது புலவருமாயிருந்தாரென்பது திருவிளையாடல் புராணத்தில் முறையிடுகிறது.

ஸத்தியபாமை :—உருக்மணி! நீ சொல்வதெல்லாம் ஆகாயத்தில் மணற்கோட்டைக் கட்டுவதுபோலிருக்கிறது. ஆகையால் அவ்வாகாய வீண்கோட்டை நீ கட்டவேண்டாம். இதற்கு வேறு பிரமாணமுண்டா? நீ சொல்லத்தான் கேட்டேன். முதலில் சிவபெருமான் சொன்னார் யென்பதற்கு பிரமாணம் என்ன?

உருக்குமணி :—ஆ! ஆ! நன்று வினவினாய் காஞ்சி புராணத்தில், வடமொழியை பாணினி பகுத்தருளியதற்கிணையாய்த்

"தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாம் தொழுதேத்த
குடமுனிக்கு அருள்புரிந்தார் கொல்லேற்றுப் பாகரெனின்
கடல் வரப்பின் அதன் பெருமை யாவரே களத்தறிவார்" என்று சொல்லியிருக்கின்றது யென்றார்.

ஸத்தியபாமை :—அப்படியிருந்தால் அதை ஒப்புக்கொள்வோம். ஆனாலும் தேவனால் செய்திருந்தாலும் தேவப்பிரீதி யில்லாமலு மிருக்கலாமே எனை!

உருக்குமணி :—அதன்று தேவப்பிரீதியுள்ளதே யென்பதற்குப்பலப் பிரமாணங்கள் உண்டு, முன்னே தானே சொல்லியிருக்கின்றேன். அக்கவியானது னக்குஞாபக மில்லைபோலும். அதாவது,—

"மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்பான்" யென்று அருணகிரியாராலும்,

"கடுக்கவின்பெறு கண்டனும் தென்றிசை நோக்கி
அடுக்கலன்று ஆடுவேன் ஆடலி னிணைப்பு
விடுக்க வாதமின் காதிரு முகத்தினை வீசி
மடுக்கவும் தமிழ்ச்செவி மாந்தப வன்றோ."

"விடையுகந்தன் பாணினிக்கிலக்கணம் மேலான்
வடமொழிக் குரைத்தாலியென் மலயமாமுனிக்குத்
திடமொத்தி யம்மொழிக் கெதிராக்கிய தென்சொல்
மடமகட் கரக்கென்பது வழுவிலோ டன்றோ."

"கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ."

"தொண்டர் காதனை நாதனை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்று பரஞ்சோதிமாமுனிவரும் திருவாய் மொழிந்திருக்கிறார். இதுவு மன்றி திருவாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையாரென்னும் இரண்டையும் வேதத்தே யெழுதாது சொன்ன வெம்பிரான், நமது அருமைத் திருக்கரத்தால் யெழுதி "பாவை சொன்ன வாயால் கோவை சொல்" என்று சொன்ன சிவபெருமானை சுவ ஹஸ்தலிகித தஸ்தாவேஜே போதிய சான்று.

சத்தியபாமை:—ஆனாலும் ஆரியருள்ளும் ஒருத்தரேயன்றி பிராமணரா லங்கீகரிக்கப்படவில்லையே என்றார்.

உருக்குமணி:—நன்றாய் சொன்னாய்; ஆ! ஆ! ஆ! ஓ! அருட்பாவாகிய தேவாரம், திருவாசகம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் திருவாதவூரடிகளும் பிராம்மணரே. திருவாய்மொழி செய்த நம்மாழ்வார், திருமழி சையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் முதலிய ஆழ்வாராதிகளும் தேசிகர், மணவாளமாமுனிவர் முதலிய சைவ வைஷ்ணவ ஆசாரியர்களும் பிராம் ணர்களே. தமிழிலக்கணம் செய்த அகஸ்தியர் தொல்காப்பியரும் பிராம்மணரே தமிழிலக்கிய உரையாசிரியர்களும், நச்சினார்க்கினியார், பரிமேலழகரும், பிராம் மணரே. இன்னும் தமிழில் அரிய பெரிய நூல் செய்தார்களை கணக்கெடுத்தால் நூற்றுக்கு ஐம்பதுக்குமேல் பிராம்மணர்களாகவே யிருக்கின்றார்கள்.

சத்தியபாமை:—அப்படி இருந்தாலும் என்? "தென்மொழிச்சிரத்தமும் பாப்பாரத்தமிழும், மழகழ் முழமுழ வென்றும் பழமொழி வழங்குகிறது? அம் முதுமொழி பழுதாமோ? நீ இப்பழமொழி யறியாது கூறினாய் என்றார்.

உருக்குமணி:—அருமைத்தங்காய் அப்படியன்று. 'தென்மொழிச் சேர்ச்சமும் பார்ப்பான் தமிழும் விழல்' என்பதே. இதன் கருத்து யாதெனில் வேதாகனுஞ் செய்யப்பட்ட அகஸ்திய ரோசரமும், பிராம்மணனுலே செய்யப்பட்ட தொல்காப்பியமும் இல்லாவிட்டால் உலகத்தில் தமிழே விழலாய்விடுமென்ப து நிச்சிதார்த்தம்.

சத்தியபாமை:—ஆனால் இக்காலத்தில் பிராம்மணர்கள் கைக்கொள்ளவில் லையே ஏன்?

உருக்குமணி:—அறிவுள்ளவர்கள் சொல்லுவார்கள் உன்னைப்போல் அறிவில் லாதவர்கள் நிஜபாஷையாவும் யொழிக்கவேண்டிய தெழுத்து அற்றதாய் மனிதர் களாகிய இன்னயெழுத்தும் ஒட்டி யொக்கவிட்டுமென்று மனிதர்களாலேயைத் தக்கொண்டதாயும் காலத்திற்குக்காலம் மனிதர்களாலேயும், வெள்ளையர்களாலும் கன்னச்சிவந்தையர்களாலும் உற்பவித்தப்பட்டதாய் அமைக்கப்பெற்ற இங்கிலீஷ் பாஷையை தங்கள் வேதத்திலும் ஸ்மிருதியிலும் அருமையாய் கூறப்பட்டவைகள் காரியமற்ற நிஜபாஷையை நம் வேதம் காயித்திரிக்கும் மேலானதாகப்பாவித்து ஸதா பாதுகாத்து மனனபாடம் பண்ணவில்லையா யென்றும், இந்நியாயத்தை யொத்துத்தான் உன்கருத்து மிருக்கிறதென நினைக்கிறேன் யென்று சத்திய பாமைக்குச் சொன்னார்.

சத்தியபாமை:—உடனே நான் ஒருக்காலும் பொய் கூறேன் என்றாள்.

உருக்மணி:—ஸத்தியபாமா; உன் வார்த்தைகளுக்கும், கேள்விகளுக்கும் கருத்துக்கும் உள்ள ஆழ்ந்த கருத்தும், அறிவும் பெற இச்சிக்கும் ஜனம்பிரமைனாரும் வெட்கி மதிமயங்கி சிரிப்பாரென்றால் காரியம் காரணம் பகுத்தறியும் காரிகையர்களும் அறிவிற்சிறந்த ஆரியர்களும் ஆச்சரியப்பட கேட்பானேனென்று சொல்லினள்.

சத்தியபாமை:—இது வெங்கும் நடவாத விஷயம், உருக்மணி நீ பொய் சொல்லுகிறாய் என்றாள்.

உருக்மணி:—என்னருமைத்தங்காய் இன்னும் என் அநுபவத்திலுண்டா மெய் அநுபவ நிலைமையும் சொல்லுகிறேன் கேள். அதாவது, நான் விவகார சம்பந்தமாக ஓர் வைக்கில் வீட்டிற்குப் போயிருந்தபோது அங்கு அந்த வைக்கீலுக்கும் அவர் பிள்ளைக்கும் நடந்த விவாதத்தைச் சொல்லுகிறேன். நீ சாவதானமாய் கேட்கக்கடவாய் யென்று சொல்லத் தொடங்கினாள். நான் குடமொக்கும் பென்னும் மாநகரத்தில் ஈசான்யதாலன் அக்கிரஹாரத்திலுள்ள ஓர் பிரபுவாகிய வைக்கீலிற்கும் அவரது அருமைத்திருக்குமாரருக்கும் நடந்த விவகாரமாவது: இங்கிலீஷ் படிப்பை வெளியாதிருந்த தன்னுடைய பிள்ளையின் குற்றத்திற்காக தம் குமாரனிடத்தில் கோபாவேசராகி, அடே பயலே; நான் இனி உனக்கு உபநயனஞ்செய்வித்து வேதபாடசாலையிலனுப்பி பஞ்சாதி சொல்லும்படி போதிப்பிக்கச் செய்வேனென்று சொல்லவே, அவ்வருமைச் சிறுதிருக்குமாரன் நடுநடுங்கி திகிலடைந்து தந்தை தாளிரண்டிலும் விழுந்து நமஸ்கரித்து அண்ணா, அண்ணா, அப்படிச்செய்யவேண்டாம். இனி நான் இங்கிலீஷ் பாடம் கவனமாய் படிப்பேன். லண்டன், கேம்பிரிட்ஜ்முதலிய இடங்களுக்குப்போய் ஜெனக்கையர், யாகோப் முதலானவர்களுக்கு உவப்பாகிய புகழ்பெற்ற வித்தியா ஞானவந்தர்களுக்கு ஏகி, அவ்விடத்து துரைமார்களின் மிகுந்த படிப்பைப் பின்னிடச் செய்யும்படியாய் படித்து மேலான இராஜ உத்தியோகம்பெற்று வருகின்றேன் என்று மிகுந்த பயபக்தி வினயத்தோடு வணங்கிச்சொன்னான். இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நான் ஐயா, என் தங்கள் அருமைத்திருக்குழந்தைக்கு ஸமஸ்கிருத சண்டாள பாஷையைக் கற்பித்து, உபநயனம் யென்னும் கான்வர்ட்டு பண்ணி வேதபாடசாலை யென்னும் படுகுழி வழியாய் நரகிற் செலுத்த எத்தனித்தீர் யென்றேன். என் வார்த்தையை இப்படியாகக்கேட்ட இம்மஹான் வெட்கி மனவருத்தமடைந்து ஐயா. இக்காலத்து கூற்று ஆப்படிச் செல்லலாயிற்று என்று வருந்தியிருக்க அதற்கு அப்போது எதா ராஜா ததாப் பிரஜா வென்றேன். அதற்கு அம்மஹான் நம் பாஷையும், நம் குலமும், நம் யார்க்குமென்று விளங்குமோவென ஏக்கமடைந்தார். கோர்ட்டு ஆச்சுபாரத்தி லெல்லாம் தமிழில் அச்சிட்டிருக்க நீங்கள் இங்கிலீஷில் யெழுதினால் என் அவர்கள் ஸந்தியா வந்தன மந்திரத்தையும் இங்கிலீஷில் உச்சரிக்கக்கூடாதென்று சொல்லமாட்டார்களா? லோயர் ஸெக்கண்டரி, மெட்ரிக்குலேஷன் பிரவேச பரீக்ஷைகள் தமிழிலேயே போகலாமென்று வைத்ததை யார் அநுஷ்டானத்திற்கு கொண்டுவந்தார்கள். நம்மவரில் ஒருவருமில்லையே அந்தோ

பாவம். ஸ்வேதர்களோத பல்லாயிரம் மைல் கடந்து கோடிக்கணக்காய் பொருள் கொண்டுவந்து தங்கள் மதப்பஞ்சரத்தில் ஆரியப்பறவைகளை தங்கள் குருவாகிய பார்வை வைத்து இங்கிலீஷ் வலையை வீசிப்பிடித்து அடைபட்ட ஆரியப்பறவைகளுக்கு ஓர் யெல்லை யில்லையே. எத்தனையோ பேர் அநேக கம்பெனிகளில் பணம்போட்டு இலவுகாத்த கிளிபோல் ஏங்கி நிற்கவில்லையா? நம்முடைய பணத்தை வித்தியா தர்மத்தின் பொருட்டு செலவிட்டு பெரும் புகழும் பெரும் புண்ணியங்களையும் தேடி வருஷத்திற்கு நூற்றுக்கு ஆறு ரூபாய் வட்டிக்கு குறையாமல் கிடைக்குமே. இதையறிந்தும் அறியாத நம்மவர்கள் “தன்கைபொருளும் தன்னுயுசமும் பிறன்கையில்கொடுக்கும் பேதையும் பதரே” என்ற வாக்கியத்திற்கு இலக்காக நம்முடைய பொருளையும் புத்தியையும் நம அருமைத் திருக்குழந்தைகளையும் அவர்களுக்குக் கொடுத்தால் நாம் எப்படிக் கடைத்தேறுவது என்றேன். இப்பொழுதாவது நாம் “பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு” என்ற முதுமொழிக்கு இணங்கி நமது அரிய அறிவில் தேடிய பாரிய பொருளை அன்னியரிடம் கொடாமலும் நம் குழந்தைகளையும், அறிவையும் அவர்களில் தஞ்சம் பண்ணாமலும் தங்கள் தங்கள் பொருளைக்கொண்டு இத்தனை மகத்துவம் பொருந்திய தமிழ் வித்தியாசாலைகளை ஸ்தாபித்து வித்தியா வியாபகஞ்செய்து பெரும் பொருளைத்தேடி புத்திரர்களை அவ்வித்தியாசாலையி லனுப்பி புருஷார்த்தத்தை யடையச்செய்து புத்தியை இத்தமிழ் பாஷையில் செலுத்தி புத்தி முத்தியை யடையும்படிக்கு சிவபெருமானை பிரார்த்திக்கின்றேன். தேவ பாஷை இரண்டில் தேவர்கள் பேசும் பாஷை வடமொழி, தேவர்க்கு பிரியமாய் மனிதர் பேசும் பாஷை தென்மொழி. தமிழென்றால் இனிமை யென்கிற அர்த்தம் கடவுளுக்கு கேட்க இனிமையான பாஷை தமிழ் யென்றாயிற்று.

(இன்னும் வரும்).

D. பஞ்சநதய்யர்,
ரிசர்வ் பாடசாலை உபாத்தியாயர்,
கும்பகோணம்.

மூனையடுவார் நயனார் சரித்திரம்

கடல் புடைசூழ்ந்த இப்பெரும்பூமியின்கண் திருவளர்ந்தோங்கும் பரத கண்டத்தின் எவற்றிற்கு முதல்வராகியபூர்வோரின் பெரிய தவத்தையுடைய அகத்திய முனிவரது கமண்டலத்தினின்றும் வெளிப்பட்டுப் பூமிதேவியின் மாத்திரத்தில் கங்கிய நித்திலமாலையையொத்தக் காவிரியாற்றுநீர் சூழப்பெற்று பலவளங்களும் நிறைந்துள்ள பாசோழநாட்டில் வேதிறு தோளியம்மைசமேத ஸ்ரீ அருட்சோமநாதஈசுவரர் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் புண்ணியக்ஷேத்திரமாகிய “திருநீடூரிலே” மண்மிகுந்தோங்கும் வேளாளர் குலத்தில் விண்ணுலகுளோர்முதல் மண்ணுலகுள்ளோர் யாவர்களும் போற்றிப்புகழ்ந்து பூமாரிபொழிய புரட்டாசிமீ மகநக்ஷத்திரங்கூடிய சுபசோபன முகூர்த்தத்திலே மூனையடுவார்

நாயனார் சுவாமிகள் திருவவதாரஞ் செய்திருந்தனர். அவர் ! ஆதி, அந்தம், உருவம், அருவம், குணம், குறி, முதலியவைகளிலகப்படாதெங்கும் நிறைந்து மனம், வாக்குக்கெட்டாது உயிருக்குயிராயிருப்பதுபோன்ற அளவிறந்த தன்மைகளையுடைய பரிபூரணமான ஒப்பற்ற நிஷ்களப்பொருளாயிருக்கிற சிவபிரானின் திருவடிக்கர்ச்சித்துத் துதித்தன்பு பூண்டொழுகி சிவாகம விதிப்படி

“ உச்சியே நெற்றிகண்ட முடம்பரை நால்கை பின்னர்
மெச்சி வெண்ணீறு மூன்று விரல் திடச்சாத் தினின்று
கச்சியும் பெருமாலை கம்மைதேயோர் புவித்தோணக்கி
பிச்சையாம் பரசுமனைத்தே தாளு மங்கிருக்குமன்றே ”

எனச் சிவபுராணங் கூறியவாறு திருநீற்றைச் சகலவினைகளையுந் நீக்கும் மருந்தென்று உண்மையாகத் தியானித்தன்புடன் உச்சி, நெற்றி, கழுத்து உடம்பின் பாதியான விசேஷ நால்கை முதலிய மற்ற ஸ்தானங்களிலும் முறைமைப்படி மூன்று விரல் பொருந்தத்தரித்து

“ உருத்திரன் விழிந்துளிகளே யுருத்தி ராக்கத்
திருத்திரள் சந்திரக்திருத்து கனற்கண்ணி
வருந்த மிதுபேத மிரண்டாறு பதினாறு
பொருத்தொருபதென்பர் திறம் போன்றகுளக்காரே ”

எனச்சொல்லுகின்ற உருத்திராக்ஷமணிகளில் சிவாகம விதிப்படி ஒரு முகமுதல் பதின்மூன்றுமுகம் வரையுள்ள மணிகளை முறையே

“ மிக்கபதின் மூன்றிலுக்கு மேலுமுகமில்லை
தக்கதலையொன்று தலைமாலையு நாலொன்பா
னக்கலயிரட்டிகள் மார்க்கு நாற்றெட்டாங்
கைக்கணிகள் பன்னிருவர்காண கலமைப்பான் ”

எனச்சொல்லும் உயர்வாகிய பதின்மூன்று முகமுள்ள மணிகளுக்குமேற்பட்ட மணிகளில்லை. அம்மணிகளை தகுதியாகிய சிகையினிடத்தில் ஒரு மணியும் சிரமாலை முப்பத்தாறுமணியும், கழுத்திற்கு எழுபத்திரண்டு மணியும், மார்பிற்கு நாற்றெட்டு மணியும் கைகளுக்குப் பன்னிரண்டு மணியும் வாகுவளையைம்பதுமணியும் அணிந்து சிவபிரானை வேதாகம விதிப்படி பயபக்தியுடன் பணிந்து இல்லறத்தை ஒழுங்காக நடத்தி சிவனடியாரைச் சிவமெனச் சிந்தையுட்கருதி அதிவீரபராக்கிரமசாலியாய் மண்டலம் எண்டிசை மன்னர்கள் புகழ்ந்தேத்த நன்கு வாழ்ந்திருந்த அவரிடம் சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்ற இராஜாக்கள்வந்து முறையிட்டு இராஜியத்தை மீட்டுக்கொடுக்கக் கூவியே சிறுவ விதிப்படி யணிந்த விபூதி, உருத்திராக்ஷத்தோடென்ன பூரித்தபுயமும் நீதி சாஸ்திர நெறிமுறைப்பயன் தெரிந்த சொற்பொருணயமும் விற்பனமும் விளங்கிய சௌந்தரியமும், கூர்வேல் தாங்கும் நியமமுடைய முனையவொர் நாயனார் சுவாமிகள் அவ்வரசர்களுக்காகப் போய்ப்போர்செய்து வெற்றிக்கொடிநாட்டி வென்று பொருள்சம்பாதித்துச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்து திருவமுது அறுசுவையுடனளித்து அவர்கள் வேண்டியமட்டும் திரவியம்

க் குறிப்பறிந்து நிறம்பக்கொடுத்துச் செல்வவந்தராய்ச் செழித்தோங்கி நன்கு வாழ்ந்திருந்ததினால் அவருக்கு "முனையடுவார் நாயனார்" என்னும் திருநாமம் உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் இக்குலமரபாயே திருத்தொண்டைச் செய்துகொண்டிருந்து பங்குனி மீ பூசநக்ஷத்திரத்தில் கருணைப்பெருங்கடலையுடைய சிவபிரான் ரிஷபவாகனரூடராய்க் காக்ஷியளிக்கப்பெற்று சிவலோகத்தையடைந்து பேரின்பத்தை அநுபவித்துக்கொண்டு அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவராய் நன்குவாழ்ந்திருக்கின்றார்.

அம்முனையடுவார் நாயனார் சுவாமியின் குருபூஜையை ஓர் புண்ணியபுருஷர் இராமநாதபுரஞ் சமஸ்தானம் பரளச்செய் கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ சி. வ. சிதம்பரம் பிள்ளையவர்களே ஆனந்தனுல் பங்குனி மீ பூசநக்ஷத்திரமுதல் பிரதிவருஷ பங்குனி மீ பூசநக்ஷத்திரத்திலுஞ் செய்துவரும்படி திருவாய் மலர்ந்தருளிய வண்ணம்

"பருதிமதிமாவுலகு பாண்டிநாட்பரளச் செய் பகாருங் கோட்டையூர்நல்
லருமைசிவசிதம்பரன்முனைவந்தத்தாண்டுதலையமைமீனப்பூசநாளில்
கருணைமிகுமுனையடுவார்க்கமலபதமர்ச்சித்துக்களிப்புடனே களங்கமாறு
யுருத்திராக்கமணிநீறுமுடைகாவி யணிந்தோர்க்கேயறுசுவையோடமுதீந்
தனரே"]

எனப் பிரதிவருஷமும் முனையடுவநாயனார் சுவாமிகள் குருபூஜை நடந்தேறிவருவதோடு அன்னாயனார் சுவாமிகள் பேரால் மனை நிலம்விட்டு முனையடுவார் நாயனார் திருமடம் அமைத்துத் தருவதாய் சி. வ. சிதம்பரம்பிள்ளை 1904-ம் வருஷம் ஆகஸ்டு மீ 1௳ காலை 1மணிக்குக் கமுதி சப்ரிஜிஸ்தாரரவர்களாபீசில் 1வது புஸ்தகம் 111 வது வால்யம் 59-60-வது பக்கங்களில் 2092, நெ. தஸ்தாவேஜாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தபடியே முடித்து குரோதி வருஷம் ஆவணி மீ 19௳ விடப்பட்டு அவ்வருஷம் பங்குனி மீ 5௳ வந்த முனையடுவார் நாயனார் சுவாமிகளின் குருபூஜையையும் சி. வ. சிதம்பரம்பிள்ளையவர்களாலேயே நடத்தி மேற்படி திருமடத்தில் பிரதிவருஷமும் தவறாது எந்தக்காலத்திலும் அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவராகிய முனையடுவார் நாயனார் சுவாமிக்குக் குருபூஜை குறைவின்றி நடந்துவரவேண்டுமென்று அவர் தனது விளைநிலங்களில் மேற்படி முனையடுவார் நாயனார் சுவாமியின் திருமடத்தின் பேருக்குச் சாசுவததானமாய் ஒன்றரையே மாகாணி அரைமாகாணிக்கு குருக்கம் விளைநிலத்தை 1905-ம் வருஷம் ஏப்பிரல் மீ 26௳ கமுதி சப்ரிஜிஸ்டாரரவர்களாபீசில் 1 வது புஸ்தகம் 121 வது வால்யம் 166 167-வது பக்கங்களில் 712 நெ. தஸ்தாவேஜாய்த் தாக்கல் செய்துவிடப்பட்டு அவ்வருஷம்படியைக்கொண்டே விசுவாவசு வருஷம் பங்குனி மீ 22௳ வந்த குருபூஜையும் நடத்தி முனையடுவார் நாயனார் சுவாமிகள் திருமடம் நன்குவிளங்கிவருகின்றது. சுபம்.

மு. திருமாலழகு பிள்ளை,

வில்லாளி ஜனகன் யெதிர்கொண்டுவந்தானே இராமச்சந்திரா
சீதை கையைப்பிடித்து சுபகாரியஞ் செய்தாய் இராமச்சந்திரா
நீதியாய் தம்பிகட்கு கலியாணஞ்செய்தாயே இராமச்சந்திரா
வீரத்துலஜனும் ஜனகன் மணவாளா இராமச்சந்திரா
மானும் மோஹிக்க வீதிவலம் வந்தாயே இராமச்சந்திரா
ஆதிகாரணன் வில்லை ஆரோகணஞ்செய்தாய் இராமச்சந்திரா
வாதுசெய்த பரசுராமனைத் துரத்தினாய் இராமச்சந்திரா
தந்தைதாயுடனே திருநகரி சேர்ந்தாய் இராமச்சந்திரா
வந்த ஜானகியோடு மகிழ்ந்து யிருந்தாயே இராமச்சந்திரா

அயோத்தியாகாண்டம்.

அரசர் குருவுடனே அலோசனை செய்தார்கள் இராமச்சந்திரா
வரிசையாயபிஷேகம் செய்ய எத்தனித்தானே இராமச்சந்திரா
பேதினிமை ஆளவைத்த லக்கினத்தில் இராமச்சந்திரா
மாதவத்தோர் யேத்த மாதாசொல் கேட்டாயே இராமச்சந்திரா
கங்கையைத்தாண்டி குகனுடன் நேசித்தாய் இராமச்சந்திரா
யெங்கும்புகழுஞ் சித்திரகூடஞ்சேர்ந்தாயே இராமச்சந்திரா
காடுநீயேகவும் அரசன் நாடேகவும் இராமச்சந்திரா
வாடிவதங்கிப் பரதனும் வந்தானே இராமச்சந்திரா
ஆதித்தன் குலத்திலே அதிகாரஞ்செய்ய இராமச்சந்திரா
பாதுகையைத்தந்து பரதனை நியமித்தாய் இராமச்சந்திரா
ஆபாஸம் வரச்செய்த வாயஸத்தின்மேலே இராமச்சந்திரா
நீயோர் அஸ்திரம்விட்டு நயனத்தைக் களைந்தாயே இராமச்சந்திரா

ஆரண்ய காண்டம்.

அத்திரிமுனிதன்னை பக்தியோடு தொழுதாய் இராமச்சந்திரா
பத்தினி அநஸூயை பிராட்டிக்கு நலஞ்செய்தாய் இராமச்சந்திரா
கோரர்கள் வாழுங்காட்டில் நடந்தாயே இராமச்சந்திரா
விராதனைக்கொன்று விண்ணுலகீந்தாயே இராமச்சந்திரா
சரபங்கமுனிக்குத் தரிசனந்தந்தாயே இராமச்சந்திரா
ஒருமுனி அகஸ்தியர்பால் வில்லை வளைத்தாயே இராமச்சந்திரா
தண்டகவனத்தோர் தண்டனிட்டெழுந்தாயே இராமச்சந்திரா
அண்டியபேருக்கபயந் தந்திருந்தாயே இராமச்சந்திரா
அண்டர்கள் இடர்தீர தண்டகம் வந்தாயே இராமச்சந்திரா
சண்டிசூர்ப்பனகை காதுமூக்குமறுத்தாய் இராமச்சந்திரா
கானகத்தில் வந்த கரனையும் வதைத்தாயே இராமச்சந்திரா
ஞானியம்மையானவளை தழுவியணைந்தாளே இராமச்சந்திரா
பேராவில் பஞ்சவடி கண்டாய் இராமச்சந்திரா
கூரானவாளினால் மாரீசன் உயிர்கொண்டாய் இராமச்சந்திரா
வானோர் உயிரை நீக்க சீதைதான் இனையிருந்தாளே இராமச்சந்திரா

இராமச்சந்திரா.

விருத்தம்.

வால்மீகி ஸ்துதி.

அண்டர்கோன் அணியரங்கத்தம்மானை ஆராதிக்க
யெண்டிசையோரும்போற்ற இராமனுய் வந்துதித்த
புண்டரீகாக்ஷன் தன்னோர் புகழையே விரித்துரைக்கும்
மண்டலம் போற்றும் வால்மீகிமுனிவனை வணங்கினேனே.

அனுமார் ஸ்துதி.

ஸத்தியவானென்றும் தர்மாத்துமாவென்றும்,
தம்பிசொன்ன அஸ்திரமானது சத்துருவைப் போய் ஜெயித்த
இராமபத்திரன் சரிதைதனைச் சொல்லுவதற்காக வாயு
புத்திரனும் அனுமந்தனெனும் ஆஞ்சநேயன் காப்பு.

நம்மாழ்வார் ஸ்துதி.

காரிமாறப்பிரனை வந்துதித்துக் காசினியில்,
மாரிபோல் தமிழ் வேதத்தை விட்டுவைணவத்தை,
பாரெங்கும் பாவர்செய்துவைத்த பெங்கள் பராங்குசனும்
வீரன் ரெகுபதி கதைசொல்லவந்து வணங்கினேனே.

கண்ணிகள் (காம்போதி)

ஆரண்ய காண்டம்.

பிர்மாதி தேவர்கள் பிரார்த்தித்து புகழ்ந்தேத்த	இராமசசந்திரா
தர்மத்தை ஸ்தாபிக்க தரணியில் உதித்தாயே	இராமச்சந்திரா
வரந்தரும் தெய்வமென்று தசரதர் மகிழ்ந்தேத்த	இராமச்சந்திரா
அருந்ததி கௌசல்லிக்கு ஆனந்தந்தந்தாயே	இராமச்சந்திரா
இக்ஷ்வாகுவம்சத்தில் ஆட்சியாயிருந்தாயே	இராமச்சந்திரா
இலட்சுமணனோடு கண்காக்ஷி தந்தாயே	இராமச்சந்திரா
வேதாதிகளையோதி வீரனுயிருந்தாயே	இசாமச்சந்திரா
மாதாபிதாக்களை வணங்கியிருந்தாயே	இராமச்சந்திரா
யாகத்தை இரட்சிக்க யோகியுடன் சென்றாயே	இராமச்சந்திரா
மேகத்தைப்போல்வந்த தாடகையைக் கொன்றாயே	இராமச்சந்திரா
பாரினில் கௌசிகன் பரமாஸ்திரந் தந்தானே	இராமச்சந்திரா
மாரீசர் முதலோரை வாரி நீ யெரித்தாயே	இராமச்சந்திரா
கங்கையின் கதையைக்கேட்டு நீ மகிழ்ந்தாயே	இராயச்சந்திரா
சங்கரன் தரிக்க மங்கையமர்ந்தாளே	இராமச்சந்திரா
அகலியின் சாபத்தைவிட்டு இரக்ஷித்தாயே	இராயச்சந்திரா
மகபதி சரிதையை விசுவாமித்திரன் விரைத்தான்	இராமச்சந்திரா
யெக்ஞத்தைப்பார்க்க நீ யேகினாய் மிதிலைக்கு	இராமச்சந்திரா
விக்னம் வராமல் வில்லை நீ வளைத்தாயே	இராமச்சந்திரா
கலியாண ஜோலையைக் கண்டு மகிழ்ந்தாயே	இராமச்சந்திரா

மான்விழியாளைத்தேடி மனங்கலங்கி வந்தாய் — இராமச்சந்திரா
அடாதுசெய்தவனை அடவியில் வதைத்தாயே — இராமச்சந்திரா
அச்சடாயு இராஜனுக்கு சுரலோகம் கொடுத்தாயே — இராமச்சந்திரா
வக்கரம் நீங்கி கபந்தன் மெய்ச்ச ஸ்துதி செய்தானே — இராமச்சந்திரா
சுக்கிரீவனிடம் சிநேகம் பேசச்சொன்னான் — இராமச்சந்திரா
உபயவிபூதிக்கும் அரசனானாயே — இராமச்சந்திரா
சபரிக்கு சேவைதந்து ஸாயுஜ்யம் தந்தாயே — இராமச்சந்திரா

கிஷ்கிந்தா காண்டம்.

பம்பாதீரத்திலே பார்த்தாயனுமானை — இராமச்சந்திரா
சம்பிரமமாய்ப்போய்ச் சேர்த்தாய் சுக்கிரீவனை — இராமச்சந்திரா
வாலியைக்கொல்ல மராமரத்தைத் துளைத்தாயே — இராமச்சந்திரா
காலங் [illegible]செய்ய [illegible] தரித்தாயே — இராமச்சந்திரா
வானரராஜனுக்கு மகுடஞ்சூட்டினாயே — இராமச்சந்திரா
சேனைகளைக்கூட்டி தேடவிட்டிருந்தாயே — இராமச்சந்திரா

சுந்தரகாண்டம்.

அங்கதன்முன் ஜாம்பவான் அநுமானைக்கேட்டானே — இராமச்சந்திரா
இலங்கையைச் [illegible] கடலைத் தாண்டினான் — இராமச்சந்திரா
நிசாசரர்களை [illegible] — இராமச்சந்திரா
அசோகவனத்தன்னில் அம்மாளைப்பார்த்தானே — இராமச்சந்திரா
சீதையைக்கண்டநுமான் செய்தியுஞ் சொன்னானே — இராமச்சந்திரா
மோதிரத்தைத்தந்து [illegible] மகிழ்ந்தானே — இராமச்சந்திரா
கதியாய்வந்த இராவணனை [illegible]த்தாயே — இராமச்சந்திரா
அநுமனைக்கொண்டு பட்டணத்தைச்செய்தாயே — இராமச்சந்திரா
அநுமானைக்கொண்டு இலங்கையைச் சுட்டாயே — இராமசந்திரா
ஜானகியின் க்ஷேமத்தை அநுமன்சொல் கேட்டாயே — இராமசந்திரா
ஆடாதசோகமெல்லாம் ஆடியிருந்தாயே — இராமசந்திரா
சூடாமணியைக்கண்டு நீசோகந்தீர்ந்தெழுந்தாயே — இராமசந்திரா

யுத்தகாண்டம்.

ஜானகியைமீட்கத் தண்டெடுத்துச் சென்றாயே — இராமசந்திரா
வானரத்தைத்தேற்றி திருவணைக்கட்டினாய் — இராமசந்திரா
சரணாகதிசெய்த சாதுவை ரக்ஷித்தாய் — இராமசந்திரா
வருணனையத்திலேமேல் வழிசெய்ய கர்ச்சித்தாய் — இராமசந்திரா
நம்பும் விபீஷணனுக்கு இராஜ்யம் தந்தாயே — இராமசந்திரா
கும்பகர்ணன் தன்னை கூறுகூறாய்ச்செய்தாயே — இராமசந்திரா
இந்திரஜித்தன் தன்னை அந்தரத்தில்வெற்ற — இராமசந்திரா
மந்திரஞ்சொல்லிவென்ற லக்ஷ்மணன் தம்பி — இராமசந்திரா
மூலபலத்தை முழுதும் துடைத்தாயே — இராமசந்திரா
காலநேமிதன்னை காலனூருசேர்த்தாய் — இராமசந்திரா
இராவணனைக்கொன்று நாடெங்கும் காத்தாயே — இராமசந்திரா

மூவரின் முதல்வன் நீயென்றுவிதிசொன்னார் இராமசந்திரா
இந்திராதிதேவர்கள் அந்திரத்தில் வந்தார் இராமசந்திரா
தங்கையைக்கண்டு வத்தமஞ்செய்தாயே இராமசந்திரா
அக்கினியில் குதித்தென் அன்னையெழுந்தாளே இராமசந்திரா
உக்கிரமசீங்கிபவனை ஒப்புக்கொண்மகிழ்ந்தாயே இராமசந்திரா
புஷ்பகத்திலேறி தட்சணம் திரும்பினாய் இராமசந்திரா
இலட்சுமிசீதைக்கு சேதுவைக்காட்டினாய் இராமசந்திரா
பரத்துவாஜமுனிவன் பாதம்பணிந்தாயே இராமசந்திரா
அறஞ்செய்யவிரும்பி அயோத்திக்கேகினாய் இராமசந்திரா
தாயார்மூவரையும் தண்டனிட்டெழுந்தாயே இராமசந்திரா
வாயாரதுதித்துவசிட்டரைப்பணிந்தாயே இராமசந்திரா
பாதாதிகள்வேண்ட பட்டந்தரித்தாயே இராமசந்திரா
வரதாவரதாவென்று மாமுனிகள் மகிழ்ந்தார்கள் இராமசந்திரா
சீதாலட்சுமண பரதசத்துருக்கனரோடு இராமசந்திரா
யோதாவியனுமந்தன் உன்னைபோற்றுகின்றான் இராமசந்திரா
சத்தியவான்யென்று சாத்தினார்முனிவர்கள் இராமசந்திரா
பக்தரை ரட்சிக்கும்பாதரென்றார்தேவர்கள் இராமசந்திரா
இராமஇராஜியமென்று காப்புகழ்ந்தார்கள் இராமசந்திரா
நாமத்தைச்சொன்னோர்க்கு காலுபதம் மீந்தாய் இராமசந்திரா
எத்திசையிலும் வந்து இரட்சித்தருள்வாயே இராமசந்திரா
பக்தர்முதலோர்க்குமுக்திதந்தருள்வாயே இராமசந்திரா
சுந்தரனாகிய சுதனை தந்தருள்வாயே இராமசந்திரா
எந்தப்பக்கத்திலும் வந்தருள்செய்வாயே இராமசந்திரா
ஆகமஅனுட்டானமொன்றுமறியேனே இராமசந்திரா
இராமதாசன்மேல்லோக கண்ணனே அருள்செய்வாய் இராமசந்திரா
மங்களம்வரச்செய்வாய் மனுசுதனே இராமசந்திரா
கங்கணக்கட்டிகாப்பாற்றுமெல்லோரை இராமசந்திரா

தத்துவஞானம்.

கபிலசாங்கியம்.

பிராதனமென்கிற பிரகிருதியே இப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணம்.

சாங்கிய சூத்திரம்.

அத திருவிததுக்காத்தியந்த நிவருத்திர
த்தியந்தபரம புருஷார்த்த ;

ஆத்தியாத்மிக (சாரீரத்தாலுண்டாவது) ஆதிதெய்வீக (தெய்விகமாக வருவது) ஆதிபௌதிகம் (பூதங்களாலுண்டாவது) என்கிற இம்மூன்றுவித துக்கங்கள் முற்றிலுமொழிவதே பரமபுருஷார்த்தமாம். அது எங்ஙனமுண்டாகுமெனில் ரஜோகுணதமோ குணங்களையொழித்து கேவலசத்குணத்தை அபிவிருத்தி செய்வதாலுண்டாகிறது.

(ஸத்வாத்ஸம் ஜாயதே ஞானம்)

என்றபடி சத்வகுணத்தாலேயே ஞானோதயமாகிறது. ஆனதாலதற்குச் செய்யவேண்டுவதியாது. சாதுக்கள் சங்கத்தைச் செய்து துர்க்குணங்களை யொழித்துக்கொள்ளவேண்டுமென விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது விரிப்பின் வளரும். இவர்களை ஸேச்வரஸாங்கியரென்னும்யோகிகள் சில விஷயங்களில் மறுக்கிறார்கள்.

பாதஞ்சலயோகம்-

சாங்கியர்களும் யோகிகளும் அநேக விஷயத்தில் ஒற்றுமையாக விருப்பினும் ஈசுவரனை நிமித்தகாரணமாகக் கூறுகிறார்கள். எங்ஙனமெனில் சத்வரஜஸ்தமோ குணரூபமான பிரதானமே உபாதாகாரணமாக விருப்பினும், ஸர்வஞ்ஞனாய், ஸர்வகர்த்தாவாய், சத்திய ஸங்கல்பராய், பரமானந்தராய், சர்வபிராணிகளுடைய, இருதயத்திலும் விளங்குபவராய், இருக்கும் ஈசுவரனை நிமித்தகாரணமாய்க்கொண்டு பிரதானம் பிரவிருத்திக்கின்றது. ஆனதால், பிரதானத்திற்கு ஸ்வதந்திரமாய் பிரவிருத்தியில்லை. சேதனமின்றி, ஜடமான பிரதானமானது பிரவிருத்திக்க முடியாதானதால் ஒரு சேதனமான ஈசுவரனையே ஜகத்காரணமாக ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த ஈசுவரனுடைய சர்வஞ்ஞாதி குணங்களை யடைவதே மோக்ஷம், அதை யெப்படி யடைவதென்றால்,

யோக சூத்திரம்.

யோகச் சித்தவிருத்தி நிரோத:

யோகமென்பது மனதின் விருத்தியை வெளியில் விஷயத்தை இச்சித்துச்செல்லவொட்டாமல் தடுத்து ஒடுக்கி ஒருவழிப்படுத்தலே. அது எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம். பிரத்தியாகாரம், தியானம் தாரணை, சமாதி என்பனவாம். அம்முறையே ஒவ்வொன்றாக குரு உபதேசத்தாலியற்றி இறுதியிற் சமாதியை யடைந்தால் பரமானந்தமான ஸத்திய ஸங்கல்பத்தையு

டைய ஈஸ்வரத்துல்லியனாகலாம், என்பதே சிரிவஞ்சி விடுத்தாம். இவர்களை பின்பற்றியே அநேக சித்தர்களும் சிற்சில பேதமான ரஸகற்ப சித்திகளோடு போகமியற்ற வேண்டுமெனக் கூறுகிறார்கள். சிறந்த ஈசுவரன் ஒருவன் உண்டென்று வாதிப்பவர்களி லனேகபேதமுண்டு. அவர்களில் அனாதிகளான மாதவர், சைவர், முதலியோர், இவ்வுலகமும் சத்தியம், மாயையும் சத்தியம், ஈசுவரனும் சத்தியம், ஜீவனும் சத்தியமென்கிறார்கள்.

மாதவர்.

சர்வலோகேசுவரனான விஷ்ணுவே ஜகத்காரணம். அவரோடு ஜீவர்களும் அவித்தியாபத்தர்களாக இருக்கிறார்கள். மாயையும் சத்தியமே, பூதாதிகளும் சத்தியமே. இவைகள் எப்பொழுதும் உள்ளனவே. பிரளயகாலத்திலழியினும் தன் மாத்திரைகளின் அம்சமான அணுக்களழிகிறதில்லையெனத் தருக்கமதத்தை யொட்டிக் கூறுகிறார்கள். ஜீவர்களுக்கு மோக்ஷமென்பது யாதெனில் ஈசுவரனை பக்திசெய்தால் அவரது அனுக்கிரகத்தால் அப்பிராகிருதமான ஈசுவர துல்லியமான சரீரத்தோடு ஸ்ரீ வைகுண்டத்திற்குச்சென்று மஹா விஷ்ணுவோடு நீடூழிவாழ்வதே.

தார்க்கிகர்கள்.

அவரது சங்கல்பத்தால் ஈசுவரனொருவனை யொப்புக்கொண்டாலும் பிரபஞ்சமானது பரமாணுக்களின் பரிணாமமே என்கிறார்கள். பரமாணுக்களானது ஒன்றோடொன்று கூடி அணுவாகிறது. அணுக்கள் ஒன்றோடொன்றுகூடி துவிணுகமாகின்றது. துவிணுகம் திருணுகமாகின்றது இங்ஙனம் முறையே பூதங்களினுடைய அணுக்களின் பரிணாமமே பிரபஞ்சமென்கிறார்கள். ஜீவனுக்கு இருபொத்தொரு விததுக்கத்துவம்ஸமே மோக்ஷம்.

சைவதாந்திகள்.

பதி, பசு, பாசம், என மூன்று அநாதியாயுள்ளது. பதி நித்திய முக்தர். அவர் பரமசிவனே, அவர் கைலாசவாஸி. பசு ஆணவம், கார்மணம் மாயை யென மும்மலங்களால் பந்தப்பட்டிருக்கிறான், அப்பாசத்தை ஈசுவரபூஜாதிகளான சரியை, கிரியை, யோகாதிகளால் ஒழிக்கப்படின், ஜீவர்கள் கைலாயத்திற்குச் சென்று ஈசனது திருவருள் பெற்று அவருக்குச் சதிருசமாக, வாழ்வதே முக்தி. அதையே வேத சிவாகமங்கள் கூறுகின்றது என்கிறார்கள், இங்ஙனமே விசிஷ்டா

த்துவிதிகளும் கூறினும் சிறிது பேதத்தைக் கூறுகிறார்கள். அவர்களும் சைவ வைணவ பேதத்தையுடையவர்கள். சைவர் ஸ்ரீகண்டாச்சாரியார், இங்ஙனமே த்வைதவாதத்தை வாதிக்கக்கூடிய நாரதபாஞ்சராத்திரம், வல்லபமதம், பாகவதமதம் தெரிய அனேக வாதங்களுள. அவைகள் ஒன்றுக்கொன்று சிற்சில பேதங்களையே உடைத்தாயிருக்கின்றன. இவ்வுலகத்தின் காரணத்தை விசாரிக்க புகுந்த மகான்களில் அவரவர் அறிந்ததைக்காரணமாகக் கூறுகிறார்கள், எல்லோரும் இறுதியில் எங்கும் வியாபித்த கடவுளையே ஒவ்வொரு அம்சங்களாகிக்கூறுவதால் ஒருவரிடத்தும் த்வேஷம் பாராட்டலாகாது. கிறிஸ்துவாதி மதவாதிகளும் ஈசுவரன் ஒருவன் உண்டென்று கூறுகிறார்கள். தேகாத்மவாதிகளான நாஸ்திகரும் ஈசுவரனை இல்லையென்று கூறினும் இல்லையென்று சொல்லுகிறவன் ஒருவன் இருக்கிறானோ இல்லையோவெனில் அங்கு யோஜிக்கவேண்டிவரும். அவர்களும் விசாரித்து மிக்க சிரமப்பட்டால் ஈசுவரனை நம்புவதற்குத்துடங்குவார்கள் ஆனதால் எந்தெந்த வாதமாயினும் வாதித்து ஈசுவரனைத் தெரிந்துகொண்டாலன்றி அவர்கள் விசாரணையின் முடிவுண்டாகுமென்று நினைக்கலாகாது, ஈசுவரனோ அவர்குணாரஹிதர் நிரவயவர் நித்தியர், சாக்தர், விபாபகர், முதலிய இலக்ஷணங்களோடு கூடியவர். அவரொருவரையன்றி, மற்றப்பார்க்கப்படும் பதார்த்தங்களனைத்தும் பொய்போ எங்ஙனம் பொய்யெனின் ஏகமாயும் வியாபகமாயிருக்கிற பிரம்மத்தினிடத்தில், அவிவேகத்தாற் (அதாவது விசாரணையால்) தோன்றுகிறது. விசாரித்தால் நசித்து விடுகிறது. அவ்விவேகத்தையே அஞ்ஞானமென்பது அதற்கே மாயையென்று பெயர்.

வரும்.

சுகப்பிரம்மரிஷி

79-ம் பக்கத் தொடர்ச்சி.

அதைக்கேட்ட சுகர் ; ஜநகன் விதேகபுரவாஸி என்று கேழ்விபுற்றேன். தேகமற்ற புரமாகிய பிரம்ம சுவரூபமாக விருக்கும் அரசனது பட்டணத்தில், குலமேது, கோத்திரமேது, சூத்திரமேது, இது என்ன புதுமை.

ஜன்மமிருத்யு, ஸௌகதுக்க வர்ஜிதம்
ஜாதி நீதி குலகோத்ர தூரகம்
சித்விவர்த்த ஜகதோஸ்ய காரணம்
தத்ஸதாஹ மிதிமௌன மாச்ரய.

என்றபடி சுவயம்பிரகாசமாயும், நித்தியமாயும், ஆநந்தமாயும், விளங்கும் ஆத்மஸ்ருபமாய் ஜன்மமும் நாசமும், இல்லாததாய் ஸௌகமும் துக்கமுமற்றதாய் இப்பிரபஞ்சத்திற்கு அபின்ன நிமித்தோபாதான காரணமாய், விளங்கும் பரமாநந்தனுன, எனக்கு ஜாதியேது, குலமேது, கோத்திரமேது, என்று கூறினர். அதைச் செவியுற்ற, சேவகன் அண்ணலே! தம்போலியருக்கு, இங்கு ஒரு விசாரணையுமில்லை. நமஸ்கரித்து அஞ்சலிபண்ணி தாங்கள் இக்கோட்டைக்குள் எங்கு இஷ்டமோ அங்கு போகலாம் என்று கூறினன். அதைக்கேட்டு, ஓமெனக்கூறி கோட்டைக்குள் சென்றார். சென்றதும் இதுகாறும் பட்டணத்தையே பாராதவராதலால் பட்டணத்தின் கோலாஹலத்தை நோக்கி ஒன்றிலும் அதிசயபுத்தியின்றி, பிறந்தபடி ஆடையின்றிச் சென்றனர். முன்னொருக்கால், சுகர் தனது பிதாவுடன் ஓர் வனத்தில் போய்க்கொண்டிருந்த காலத்தில், வழியில் தடாகத்தில் ஆடையின்றி, ஜலக்கிரீடை பண்ணிக்கொண்டிருந்த ஸ்திரீகள் சுகரைக்கண்டு சிறிதும் லஜ்ஜையின்றி, கிரீடித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு போகிற வியாஸரைக்கண்டவுடன் நாணி, ஆடைகளையணிய ஆரம்பித்தார்கள். அதைக்கண்ட வியாஸர், அப்பெண்களை நோக்கி பாலியப்பருவமும் நிர்வாணியாகவும் போகிற எனது புத்திரனை சுகர் சென்றபோது நீங்கள், லஜ்ஜையின்றி இருந்தீர்களே. இப்பொழுது என்னைக்கண்டு வஸ்திரம் தரித்ததற்குக் காரணம் யாதெனக்கேட்டனர். அதற்கவர்கள் (தவஸ்திரியும் பதிதாஸ்தி) உமக்கு ஸ்திரீபுருஷ பேதத்தோற்றமிருக்கிறது. அவருக்கு அது இலலை. எல்லாவற்றையும் ஒரே சின்மயமாய் பார்க்கிறார், ஆனதால் எங்கட்கும் லஜ்ஜை தோன்றவில்லை என்றார்கள், அத்தகைய ஏகரூபஞானத்தையடைந்து, ஆநந்தமான ஆத்மஸ்வரூபத்தையன்றி, சரீராதி புத்தியின்றி சஞ்சரிக்கும் இவருக்கு பட்டணமாயினும் கிராமமாயினும் வனமாயினும் ஒன்றே.

த்வமஹமபிமானஹீனோமொதிதகாராஜநாசார: விஹாரதிபால வதேகோவிமலசுகாம் பொங்கிதென மக்ன என்றபடி

நீ, நான் என்ற அபிமானமற்றவராய், ஸலாஹிதமான (அழுக்கின்றிய சுகசமுத்திரமான ஆத்மாநந்தத்தில் மூழ்கினவராய், குழந்தைகளைப்போல பட்டணத்திற்குட் சென்றார். பட்டணத்திலுள்ள ஜனங்கள் கண்டு ஆ இதென்ன அதிசயம் கோடிசூரியப்பிரகாசமுகமும் ஆநந்தம்பூரித்த மந்தகாசமும் பாலியப்பருவம், பொருந்தியவரும் அவதூதராயுமுள்ள, இவர் யார்? ஸநகாதியோகிகளிலொருவரோ அல்லது வியாசரது புத்திரரான சுகரோ? தாருகாவனத்து மஹரிஷிகளது கர்மபங்கப்படுத்திய ஈசனது பிக்ஷாடனக்கோலமோ? என ஒருவருக்கொருவர் விஸ்மயத்தோடு, பேசிக்கொண்டனர். சுகரோ மாடமாளிகை பொருந்திய பட்டணத்தைக்கண்டு ஒன்றையும் அதிசயமாகப் பார்க்கவில்லை.

ஜகத்ஸர்வமிதமஸாரம்மாயிகமேவேதி
மனஸிமத்வாஸ: பர்யடதிபாதிதாச: ப்ர
கலிதமதமான மத்ஸரகோபி:

என்றபடி அகிலப்பிரபஞ்சத்தையும் மாயையால் தோற்றுகிறதென்றும் அஸாரமென்றும், மனசில் திடமாய்ப் பார்த்தவர்களாய், மதமான மாத்ஸர்யாதிகளற்றவராய், ஆசையை யொழித்தவருமான, எம் அருணநிதிக்கு ஆச்சர்யமானது, எல்லா வீதியையும் கடந்து அரசனது அரண்மனைவாயிலில் சென்று உள்ளே நுழைந்தார். அங்கு நிற்கும் சேவகர்கள் இவரைக்கண்டவுடன் பயந்து நமஸ்கரித்து, பிரபோ, அரசனண்டையிற்சென்று தெரிவித்துவந்து அழைத்துச்செல்லுவோம் எனச்சொல்லி, அங்கேயே நிறுத்திவிட்டு உள்ளேசென்று, இவரது வரவைத்தெரிவித்தார்கள். அதைக்கேட்டு ஜநகமௌனவதிந்து ஒன்றும் கூறாது மௌனமாயிருந்தார். சேவகர்களும் மௌனமாய்த் திரும்பினார்கள். வாயாலேயே ஒருவரும் அழையாமல் ஏழுநாள் அன்னமின்றித் தாகத்திற்கு நீருமின்றி, சீதோஷ்ணத்திருஷ்டியன்றி மானவமானமின்றி காத்திருந்தார். பிறகு மந்திரிகளைவிட்டு அரண்மனையில் ஓர் புறத்திலழைத்து ஆகாராதிகளைக்கொடுத்துபசரிக்கும்படி, அரசனாஞ்ஞையளித்தார் அங்கு ஸ்வாமினியான யுவதிகளைக்கொண்டு, ஆகாராதியுபசாரங்களைச்செய்யும்படி ஆக்ஞையளித்தார். அங்கும் ஒரு விஸ்மயமுமின்றி இருந்தனர்.

இளமென்றென்னல் பொன்னவசலத்தின்
மிக்கபொருப்பனை யிழுக்கவற்றோ.

என்றபடி இளங்காற்றானது இமயமலையின் ஓர் மூகட்டை இடித்து விடுமா அங்ஙனமே மகாதீரரான எம் ஆனந்தமூர்த்தியை மலமாம்ஸ நாற்றத்தோல் ரூபமான ஸ்திரீகளால் மயக்கமுடியுமா முன்னொருக்கால் வியாஸர் தன் புத்திரனைக்காணாது ஏ சுக என்று கூவிக்கொண்டு வனங்களிற் சுற்ற மரங்களெல்லாம் ஏன் ஏன் என்று கேட்டதாம். அதற்கு தாத்பரியம் யாதெனில் (அவர் எங்கும் வியாபித்தசிதாகாசஸ்வரூபமாகவே இருத்தலால் மரங்களிலுமிருப்பதால் அந்தரூபமாகவுமிருந்து கேட்டனர் என்று பொருள். அத்தகைய மஹாமகிமைபொருந்தியவரானதால், இவர்கள் மயக்கில் சிறிதுமயங்காதிருக்க அவர்கள் பட்ட சிரமம் வீணாய்விட்டதையரசனிடத்து, முறையிட அரசனும் ஆநந்தபரவசனாய் இவரிடத்தில் வந்து ரிஷிபுத்திரனைத்தால் நமஸ்கரித்து அர்க்கிய பாத்திய ஆசனம் கொடுத்து முனிவ, தாம் இங்கு வந்தகாரணம் யாதோ என்றார். அதைக்கேட்ட சுகர் கூறுகிறார்.

தன்னுளவிகற்பித்திருந்தவிகற்பம்போகிற்
றவிர்ந்திடும்மாயைபிற்பயனேசற்றுமில்லை
யின்னவதைத்தானவுண்மையியம்பவேண்டும்
யாமயக்கமாற்றுமிறைவ.

என்று ஆத்மசுவரூபத்தில் கற்பனையாகத்தோன்றும் விகற்பமான, துவைதமொழிந்தால், கூறப்படுகிற மாயையால் பயனொன்றில்லை. இவ்வுண்மையை எனது அனுபவத்தாலறிந்தேன். இதுதான் அடையவேண்டிய ஞானமா ? இத்தகையஞானமேதாமும் அடைந்திருக்கின்றீர்களோ அவ்வுண்மையை சிறுவனான எனக்குக் கூறவேண்டும் என்றார் அதைக்கேட்ட ஜனகர்

முனிவநீயேமதித்துணர்ந்து பிதாவுரைக்க
மறுத்துங்கேட்டாயங்கிலையே நிச்சயமிங்கு
கண்டஞானவாகாய புருஷனுளயலொன்றில்லை,

முனிவ, நீயே பூர்வஜன்மபாக்கியவசத்தால் ஆத்மஞானத்தை சுவயமாகவே யடைந்தீர். தமது பிதாவிடத்துக்கேட்டு, மறுத்தும் உரைத்தீர் நீர எந்த சுவாநுபூதியையடைந்தீரோ யங்கிலையே நிச்சயம், இங்கு அகண்டமாயும் ஞானமாயும் சிதாகாசமாயுமிருக்கிற பரமாநந்தத்தை யன்றி மற்றொன்றில்லை. பிறகு சுகர் இந்த ஞானத்தோடு இல்லறத்திலிருக்கமுடியுமா ? என்றார்.

ஜனகர் முனிவ, இந்த ஞானமடைந்தவரெங்கிருப்பினும் தோஷமில்லை. காட்டிற்சென்றாலும் அங்கும் ஆகாராதிகளைச் சம்பாதிக்கவேண்டும் வியாக்கிராதிகளாற் பீதியுண்டாகும். சீதோஷ்ணாதிகளால் சரீரத்திற்கு வாட்டமுண்டாகும். ஆனதால் இங்கிருக்கும் பிரவிருத்தியைப் பார்க்க இன்னும் அநேக பிரவிருத்தியைச் செய்யவேண்டும். இங்கு அத்தகைய ஹிம்சையில்லை. நாம் எங்கிருப்பினும், அகண்டாகாசமான ஆத்மசுவரூபமே எங்கு சென்றாலும், பிராப்தமுள்ளமட்டும் பிரகிருதியின் சேஷ்டைகள் நம்மைவிடாது. ஆனதால் நாட்டில் இருப்பினும் காட்டிலிருப்பினும் வருவன வந்தேதீரும் என்றார். அதைக்கேட்டு சம்சயந்தெளிந்தவராய் (தனது பிதாவிடத்துச் சென்றனரெனத் தேவிபாகவதம் கூறுகின்றது) இமயமலைச்சாரலுக்குச் சென்று ஆயிரவருஷகாலம் சமாதியில்

பச்யதி கிமபினரூபம்
நவதிகசுரோண திகிஞ்சிதபி
வசனம் திஷ்டதி நிரூபம்
பூமனி திஷ்டாவலம்பிய
காஷ்டவத்யோகி.

என்றபடி உவமானமற்ற ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவிடத்து நிஷ்டையடைந்து ரூபங்களொன்றையும் பாரார். ஒன்றையும் கேளார். ஒருவசனத்தையும் சொல்லார். கட்டை எப்படிக் கிடக்குமோ அதேமாதிரி ஆநந்தத்தில் வீற்றிருந்தார் அம்மஹாயோகியே லோகத்திற்கு அனுபவமார்க்கத்தை விளக்கியவர். இவர் பிர்மவித்தையின் ஆசாரியர். இவ இவர் கருணையங்களுடன் இவரது மகிமையை புராணங்களுள் விரிவாய்க்கூறப்பட்டிருக்கிறதாயினும் நாம்சங்கிரஹமாகத்தெரிவித்தோம் இச்சரித்திரத்தால் நாம் அறிவது யாதெனில்,

ஞானமென்பது புஸ்தகபடிப்பால் மாத்திரம் வருவதல்ல, ஞானத்திற்குச்சாதனம் விவேகம், வைராக்கியாதிகளோடு சத்சங்கத்தைச் செய்யவேண்டும். செய்யினும் பூர்வபாக்கியமில்லையானால் ஞானோதயமாகாது நமது மஹரிஷியான சுகரோ பிறக்கும்போதே ஞானத்தோடு உதித்தவர். அவருக்கு பிறர் உபதேசத்தால் ஞானோதயமாகவில்லை. தமது பூர்வபாக்கியத்தாலேயே ஆத்மாவையறிந்து அடங்காதாநந்தத்திலமுழ்ந்தி அத்வைதபேறுபெற்றவராதலால் அவரது திருவடியை முக்காலத்தும் நமஸ்கரிப்பாம்.

ஓம்.